REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 ஒகஸ்ட் 10 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 190 | Saturday 10, August, 2024 | 12பக்கங்கள் | 50/-


## அவசர தேவைக்கு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டுகோள்

### அமைச்சர் டிரான் அலஸ்



கடவுச்சீட்டு அவசரமாக தேவைப்பட்டால் மாத்திரம் தற்போது விண்ணப்பிக்குமாறு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். 06

# ரணில் போன்ற தலைவரை இன்று தேடுகிறது பங்களாதேஷ்

## அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவிப்பு

போராட்ட மாணவர்களின் செயற்பாடுகளால் நெருப்புக் குவியல்களாக மாறியுள்ள பங்களாதேஷ் நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவரை தேடிக்கொண்டிருப்பதாக வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

'பெண்கள் எமது பலம்' எனும் தொனிப்பொருளில் நேற்று (09) கொழும்பு இலங்கை கண்காட்சி மற்றும் மகா மண்டபத்தில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் 06



## கடற்றொழில் சாசனம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



தேசிய மீனவர் சம்மேளனத்தில் தேசிய மகாநாடு "தியவர திரிய" என்ற தொனிப்பொருளில் நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் நெல்சன் எதிரிசிங்க மற்றும் பிரதிநிதிகள் கடற்றொழில் சாசனத்தை கையளித்தனர்.



03 டிஜிட்டல் திரை பயன்பாட்டால்

### குழந்தைகளின் மூளை பாதிப்படையும் அபாயம்

## நல்லூரான் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம், நேற்று (09) காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நேற்று முதல் 25 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளன. செப்டம்பர் 01 ஆம் திகதி காலை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. (படம்: யாழ். விசேட நிருபர்)

சொந்த நலன் கருதாமல்

## நாட்டை மீட்டெடுக்கும் பணிக்காக அரசுடன் இணைந்தவர்களுக்கு வழக்கு

பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டிருந்த நாட்டை மீட்டெடுக்கும் பணியில் சொந்த நலன் கருதாமல் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாமல் செய்தவர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான சஜித் பிரேமதாசவே என்று குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, நாட்டின் வரலாற்றில் பல நூற்றாண்டுகளிலும் பார்க்க 06

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில்

## அரச, தனியார் ஊடகங்களின் முழு ஒத்துழைப்பும் அவசியம்

### நீதியும் நியாயமுமான தேர்தல் நடத்துவது தகவல் திணைக்களத்தினதும் பொறுப்பு



ஊடகத்துறை அமைச்சு செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளில் ஊடகங்கள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார். 06

தோட்ட தொழிலாளருக்கான

## ரூ. 1,700 சம்பள அதிகரிப்பை வழங்குவதில் அரசு உறுதி

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை நிர்ணயித்தபடி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 06

## ஹரின், மனுஷவின் கட்சி உறுப்புரிமைகள் இரத்து

### உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்காரவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகுமென, உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி 06



LANKA Sathosa PRICE SETTER TO THE NATION 03

### கீரி சம்பா, சீனி, கிழங்கு உட்பட பொருட்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நேற்று அறிவிப்பு

## சிறார்களுக்கு காய்ச்சலுடன் மூச்சுத்திணறல் அறிகுறிகள்

### உடனடியாக வைத்தியரை நாடவும்



சிறார்களுக்கு ஏற்படும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலை தொடர்ந்து தற்போது மூச்சுத்திணறல் அறிகுறிகள் அதிகரித்து வருவதாக, வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். இந்த வைரஸ் நோய் அறிகுறிகளாக தலைவலி, இருமல், சளி, தும்மல், உடல்வலி ஆகியவற்றுடன் கூடிய காய்ச்சல் இருக்குமென்றும், வைத்தியர்கள் தெரிவித்தனர். 06

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா


## ஐக்கிய மக்கள் சக்தி தவிசாளர் பதவியிலிருந்து இராஜினாமா



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா அந்தக் கட்சியின் தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் 06

NIC உட்பட சான்றுகள் இல்லையெனில்

## தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக தற்காலிக அடையாள அட்டை



ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை அல்லது அதற்கு சமமான ஏனைய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய கிராம அலுவலக உத்தியோகத்தரிடம் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதனூடாக தற்காலிக அடையாள 06

## கெய்ரோ வர்த்தக சம்மேளன நிகழ்வில் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி பங்கேற்பு



எகிப்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இலங்கை மற்றும் எகிப்துக்கிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதா ர ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக எகிப்திய வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்புடன் கெய்ரோ வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

நிகழ்வில் எகிப்திய வர்த்தக சம்மேளனத்தின் (FEDCOC) தலைவர், ஆசிய விவகாரங்களுக்கான உதவி வெளியுறவு அமைச்சர், கெய்ரோ வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மற்றும் FEDCOC மற்றும் கெய்ரோ வர்த்தக சம்மேளனத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கெய்ரோ வர்த்தக சம்மேளனமானது 6,00,000 க்கும் 06

தமிழர் தரப்பு பொது வேட்பாளர்

## அரியநேத்திரன் தெரிவு குறித்து 11ஆம் திகதி முடிவெடுக்கப்படும்

### தமிழரசுக் கட்சி தலைவர் மாவை



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடவுள்ள தமிழரசு கட்சியின் மத்திய குழு 06

## பீல்ட் மார்ஷலின் இராஜினாமா ஐக்கிய மக்கள் சக்திக்கு பலம்

### ஜே. சி. அலவத்துவல எம்.பி.



ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா இராஜினாமா செய்துள்ள நிலையில், அவரது இராஜினாமா ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரும் பலமாக அமைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சி. அலவத்துவல தெரிவித்தார். 06

விடுவிப்பதா? இல்லையா?

## கெஹெலியவின் மனு மீதான உத்தரவு செப். 4ஆம் திகதி

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு



தரமற்ற மருந்துகளை கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பாக விசாரணை முடியும்வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த 06



03

### எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்த பாதிப்பு; முதற்கட்ட நட்டஈடாக 10.2 மில். டொலர்

கப்பல் நிறுவனம் வழங்கியதாக சபையில் அறிவிப்பு

# எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பட்டினி என்பது கட்சி சார்பற்றது



## இன்று மேடைகளில் மக்கள் படும் துன்பங்களைப் பற்றிப் பேசுபவர்கள் அன்று பொருளாதாரச் சவாலிலிருந்து தப்பி ஓடிவிட்டனர்

எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பட்டினி என்பது பாகுபாடற்றது என தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்களின் சுமையைக் குறைத்து அடுத்த தலைமுறைக்கு வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப உதவுமாறு இலங்கையிலுள்ள அனைத்துப் பெண்களிடமும் கேட்டுக் கொண்டார்.

அன்று உணவு வழங்க முடியாமல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் இந்நாட்டு தாய்மார்கள் அனுபவித்த துன்பங்களை யாரும் மறந்துவிடக் கூடாது என தெரிவித்த ஜனாதிபதி, இன்று மேடைகளில் தேசப்பற்றையும், மக்களின் துன்பங்களையும் பேசும் தலைவர்கள் சவாலுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஓடியதை இந்த நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.



'பெண்கள் எமது பலம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு இலங்கை கண்காட்சி மண்டபத்தில் நேற்று (09) நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

## நாட்டு மக்களின் சுமையைக் குறைத்து பிள்ளைகளுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்.!

கட்சி வேறுபாடின்றி நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான பெண்கள் அமைப்புக்கள், கட்சி கிளைச் சங்கங்களின் தலைவிகள் மற்றும் பிரதிநிதிகள் என பெருமளவானோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நெருக்கடியான பொருளாதார நிலைமைகள் இருந்த போதிலும், இந்நாட்டுப் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதை தாம் ஒருபோதும் புறக்கணிக்கவில்லை என்று தெரிவித்தார். பெண்கள் வலுவூட்டல் சட்டத்திற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெண்களுக்கும் வழங்குவதற்கான சட்டக் கட்டமைப்பை அமைப்பது உட்பட பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

" ஜனாதிபதித் தேர்தலில் நான் ஏன் கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடுகிறேன் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பசி கட்சி சார்பற்றது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பசி உணரப்படுகின்றது. வயிற்றைப் பட்டினி இன்றி நிரப்புதல் நடுநிலையானது. எனவே, அரசியல் கட்சி நிற பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டு மக்களின் வயிற்றை நிரப்ப ஒன்றிணைய வேண்டும். இந்நாட்டு மக்கள் படும் துன்பங்களை நான் நன்கு புரிந்து கொண்டுள்ளேன். மின்சாரம் இல்லாமல், எரிபொருள் இல்லாமல், உணவு இல்லாமல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் நீங்கள் அனைவரும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டீர்கள். நாம் மீண்டும் இந்த துன்பத்தை சந்திக்க வேண்டுமா? அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஏனையவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்காமல் ஓடியதால்தான், நான் ஜனாதிபதியானேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரிடம் 'இந்த சிரமங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்' என்று கோரிக்கை விடுத்தேன். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற அவர்கள் எங்களை ஆதரிக்கவில்லை.

அதன்போது, எனக்கு மூன்று பெண்கள் ஆதரவு வழங்கினர். இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா ஆகிய 3 பெண்கள்.

தேசப்பற்று குறித்து பேசுபவர்கள், மக்கள் படும் துன்பங்கள் தமக்குத் தெரியும் என்று கூறியவர்கள் அன்று ஓடினார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த மூன்று பெண்கள் நாட்டை முன்னேற்ற உதவினார்கள். இந்த மூவரின் உதவி இல்லாவிட்டால் இன்று நாம் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது.

இந்நாட்டில் உரம் இல்லாத போது அமெரிக்காவைச் சேர்ந்த சமந்தா பவர் எங்களுக்கு ஆதரவளித்தார். அந்த உரத்தை வழங்கியதன் காரணமாக, அந்த சிறு போகத்தில் வெற்றி பெற்று பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு வர முடிந்தது. எனவே அந்தப் பெண்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

சிறந்த தேசபக்தர்கள், அனுபவம் வாய்ந்த தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் எவரும் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்கவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஒரு நாடாக முன்னோக்கி வந்தோம். நாம் மேலும் செல்ல வேண்டும். நாம் அனைவரும் பட்ட துன்பங்களைக் கூறத் தேவையில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். 2021 ஆம் ஆண்டில், வணிக வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்களின் மதிப்பு 250 பில்லியன் ரூபா. இன்று அது 500 பில்லியன் ரூபாயைத் தாண்டியுள்ளது. எனவே, அது தொடர்பில் நாம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம். சில வீடுகளில் பெரியவர்கள் ஒரு வேளை உணவைத் தவிர்த்து விடுவார்கள். மற்றொரு பிரிவினர் தங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க முடியாமல் தவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிடம் நான் ஆதரவைக் கோரியபோது, அவர் வழங்கிய உதவியினால் இன்று இந்த நிவாரணங்களை நாங்கள் பெற்றுள்ளோம். ஜெனட் யெலன் மற்றும் நிர்மலா சீதாராமன் ஆகியோர் எங்களுக்கு ஆதரவளித்தனர். இன்று நாங்கள் வலுவாக முன்னேற முடிந்தது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்களுக்கு கடன் வழங்கும் பல நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம். நாங்கள் அதன்போது இணங்கிய நிபந்தனைகளை பொருளாதார பரிமாற்றச் சட்டத்தில் சேர்த்துள்ளேன். இந்தப் பாதையில் நாம் தொடர்ந்தால், ஒரு நாடாக நாம் மீண்டு வரக் கூடிய திறன் உள்ளது.

ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் திருத்தப்படும் என சிலர் கூறுகின்றனர்.

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என பகிரங்கமாக அறிவித்துவிட்டு தப்பி ஓடியவர்கள் இன்று பெண்களின் ஆதரவுகளால் கிடைத்த இந்த நிவாரணத்தை அகற்றுவோம் என கூறுகிறார்கள்.

நாங்கள் அனைவரும் மிகவும் சிரமப்பட்டு இந்தப் பயணத்தை அடைந்துள்ளோம். எனவே, இந்த நிவாரணத்தை இழப்பதா அல்லது பாதுகாப்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன்போது, முகத்தையோ பெயரையோ பார்க்காமல் தான் மற்றும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்க வேண்டும், நீங்கள் அந்த முடிவை எடுக்க வேண்டும்.

இந்த கடினமான பயணத்திலும் இந்த நாட்டு பெண்களை நான் மறக்கவில்லை. அஸ்வெசும, உறுமய, குறைந்த வருமானம் கொண்டவர்கள் வசிக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு உரிமை வழங்குதல், மலையகத்தில் கிராமங்கள் அமைக்கும் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் போன்ற வேலைத் திட்டங்களை செயல்படுத்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று, பெண்களை வலுவூட்டவும் நாம் நடவடிக்கை எடுத்தோம்.

## இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்க அரசாங்கத்தினால் முடிந்தது.

அதற்காக பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். 20 - 30 வருடங்களாக இந்த நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைக்கான போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தன. இப்போது அவற்றைப் பேசித் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு சம உரிமை இருக்க வேண்டும். இப்படி சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதேவேளையில் இந்த நாட்டில் பெரும்பான்மையாக உள்ள பெண்களுக்கு சம உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி, அனைத்து பெண்களுக்கும் இந்த உரிமைகளை வழங்குவதற்கான முதல் சட்டத்தை இப்போது கொண்டு வந்துள்ளோம்.

## எதிர்கால சந்ததியினருக்காக அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக நாடளாவிய ரீதியில் உள்ள பல்வேறு பெண்கள் அமைப்புகள் ஜனாதிபதியிடம் உறுதி!

மேலும், ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை வழங்க சட்டம் கொண்டு வரப்படுகிறது. மேலும், இந்நாட்டில் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இன்னும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்பதைக் கூற வேண்டும்.

இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கிராம மட்டத்தில் உள்ள முக்கிய பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அடுத்த வருடம் ஒரு மாபெரும் மாநாட்டைக் கூட்டவுள்ளோம்.

நாம் அனைவரும் ஒரு நல்ல நாட்டை விரும்புகிறோம். உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த நாடு தேவை. அதற்கு முன் நம் வீடுகளில் உள்ள வாழ்க்கைச் சுமையைக் களைந்து முன்னேறுவோம். நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன்." என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,**

இன்று இது மிகவும் சிறப்பான பெண்கள் சந்திப்பு என்றே கூற வேண்டும். இதற்கு முன்னரும் பெண்கள் மாநாடுகளை நடத்தியிருந்தாலும், எனது 32 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் பல கட்சிகள் பங்கேற்கும் மகளிர் மாநாட்டில் நான் பங்கேற்பது இதுவே முதல் முறை. இன்று நாம் ஏன் ஒன்றாக இருக்கிறோம்? அதற்கு உரையாடல்கள், விவாதங்கள், வாதங்கள் தேவையில்லை. பங்களாதேஷின் நிலைமையை தொலைக்காட்சி முன்நின்று பார்த்தால், நாங்கள் ஏன் ஒன்றாக இணைந்தோம் என்பது தெளிவாகத் தெரியும்.

பங்களாதேஷ் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் பாராளுமன்றத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இதுவரை 20இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அந்த போராட்டக்காரர்களின் செயற்பாடுகளை தொலைக்காட்சியில் பார்க்கும்போது எமது நாட்டிலும் அன்றைய தினம் அதுபோன்ற ஒன்றுதான் நடந்தது என்பது தெளிவாகின்றது.

பங்களாதேஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றுலா விடுதிகள் மற்றும் அரச நிறுவனங்களை எரித்து அழித்துள்ளனர். பங்களாதேஷ் முழுவதும் நெருப்புக் குவியல் ஆகிவிட்டது.

இவ்வாறான நிலையில் இன்று பங்களாதேஷ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவரைத் தேடிக்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவர் இந்த தாய்நாட்டிற்கு இருந்தமையினால் அவ்வாறானதொரு



நிலைமையை நாம் அப்போது எதிர்கொள்ளவில்லை. அத்துடன், நாட்டின் முன்னாள் தலைவர் நாட்டை விட்டு வெளியேறிய போது, இந்த தாய்நாட்டில் இரத்தம் சிந்துவதற்கு இடமளிக்காமல் அரசாங்கத்தை நிறுவி நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இன்று நாட்டில் சரியான தீர்மானங்களை எடுக்கும் பெண்களாகிய நாம் அவரின் வெற்றிக்காக கட்சி நிற பேதங்களை ஒதுக்கி ஒரே குடும்பமாக ஒன்றிணைந்துள்ளோம்.



**மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க,**

நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் பெண்களாகிய உங்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய தீர்மானம் எடுக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த முக்கிய முடிவை எடுக்காவிட்டால், நாடு பின்னோக்கி செல்வதைத் தடுக்க முடியாது. இந்த நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்லக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அன்று எமக்கு எரிவாயு, பிள்ளைகளுக்கு பால் மா இருக்கவில்லை. அப்போது பொருளாதாரம் வங்குரோத்தாகி விட்டதாக கூறியபோது, இந்த நாட்டை பொறுப்பேற்க எதிர்க்கட்சி இருக்கவில்லை. எதிர்க்கட்சியினர் தலைமறைவாகினர்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமக்கு உயிர் மூச்சைத்தந்தார். ஒரு பெண் குழந்தையைப்பெற, அவள் வலுவாக இருக்க வேண்டும். அதனால் தான் அந்த பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் ஜனாதிபதி 10 மாதங்களுக்கு போசாக்குப் பொதிகளை வழங்கினார். பெண்களால்தான் இந்த நாட்டை வலுப்படுத்தி நாட்டை முன்னேற்ற முடியும். ஜனாதிபதி தலைமையில் பெண்களின் பாதுகாப்புக்கான சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

70 களில் இருந்து இந்த நாட்டில் பயங்கரவாதத்தை விதைத்தது யார்? இளைஞர்களைக் கொன்று சாக்கடையில் வீசியது யார்? அவ்வாறானவர்களே இன்று நாட்டின் அதிகாரத்தைக் கேட்கின்றனர். பின்னோக்கிச் செல்லும் நாடு எமக்கு வேண்டாம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை, சாதாரண வெற்றியாகவன்றி, மாபெரும் வெற்றியாக மாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் உள்ளடங்கிய பலர் கலந்து கொண்டனர்.

மீண்டு வரும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதன்போது உறுதிமொழி வழங்கினர்.



# எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்த பாதிப்பு; முதற்கட்ட நட்டஈடாக 10.2 மில். டொலர்

## கப்பல் நிறுவனம் வழங்கியதாக நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தம் காரணமான பாதிப்புக்கு கப்பல் நிறுவனம் 10.2 மில்லியன் டொலரை முதற்கட்ட நட்டஈடாக வழங்கியுள்ளதாக நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

அதேவேளை சட்ட மாஅதிபரின் அனுமதியின்றி நியூ டயமன் கப்பலை இலங்கையின் கடல் எல்லையிலிருந்து வெளியேற்றிய நபர், எதிர்க்கட்சி தலைவருடன் ஒன்றிணைந்துள்ளமை கவலைக்குரியதென்றும் நீதி இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 27/2 கீழ் எதிர்க்கட்சி தலைவர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி மூழ்கிய எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் மற்றும் ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக சட்ட மாஅதிபர் ஊடாக சிங்கப்பூர் நாட்டில் சர்வதேச வணிக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதேபோன்று அந்தக் கப்பல் நிறுவனத்தின் உரிமையாளர் வாக்குமூலமும் வழங்கியுள்ளார். இலங்கை சார்பில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி பதில் வாக்குமூலம் வழங்குவதாக சட்ட மாஅதிபர் அறிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கைகளை அதற்கான ஆலோசனை நிறுவனமும் சட்ட மாஅதிபர் திணைக்களமும் முன்னெடுத்துள்ளன.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள சிங்கப்பூர் நாட்டில் சர்வதேச வணிக நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.



டென்டன் ரொடிக்ஸ் மற்றும் டோவிக்ஸன் ஆகிய நிறுவனங்கள் இவ்விடயத்தில் இலங்கைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றன.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் மாத்திரம் இவ்விவகாரத்தில் தனித்து செயற்பட முடியாது என்பதால் சர்வதேச மட்டத்தில் சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்தியிருந்தார்.

மதிப்பீடு தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட துறைசார் நிபுணர் குழுவினர், இடைக்கால மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி கப்பல் விபத்து தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் 4 அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற விசாரணைக்கு இந்த இடைக்கால மதிப்பீட்டு அறிக்கை பயன்படுத்தப்படுவதால் அந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவது சாத்தியமற்றது.

இந்த விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம் 10.2 மில்லியன் டொலரை முதற்கட்ட நட்டஈடாக வழங்கியுள்ளது.


அதேவேளை கடற்றொழில் அமைச்சின் ஊடாக 10.2 மில்லியன் டொலர் செலவழிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விபத்தினால் கரையொதுங்கிய கழிவுகளை அகற்றும் பணிகளை நிறைவு செய்துள்ளதாக கப்பல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது என்று தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92

## வருடங்களுக்கு முன் தினகரன்

### இன்று 10 ஒகஸ்ட் 1932



காலபேஸ் கார் விபத்து

விடையளிக்க மறுக்குமாறு தூண்டியதாக வழக்கு

புரக்டர் மீது புகார்

ஜனாப் மார்க்கருக்கு 6 வாரம் வெறுங் காவலும் 100 ரூ. அபராதமும்

கொழும்பு, ஆகஸ்டு, 9—

ஜூலை மாதம் 12-ந் தேதியன்று நடந்த காலபேஸ் கார் விபத்து சம்பந்தமாக போலீஸ் சூப்பரின்டெண்டு திரு. டப்ளியூ. ஏ. முல்லர் கேட்ட சில கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டாமென்று, ஜனாப் பலீல் கபூரை புராக்டர் ஜனாப் ஏ. எம். மார்க்கர் தூண்டியதாக, அவர்மீது கொழும்பு போலீஸ் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

...காதரும், ஜனாப் மார்க்கரும் 15 நிமிஷங்களுக்குப் பின் வந்தனர். வாக்குமூலம் வாங்கும்பொழுது, மத்தியில் ஜனாப் பலீலைத் தடுக்கக்கூடாது என அவர்களிடம் நான் கூறிவிட்டு, அவர்கள் முன் ஜனாப் பலீலிடமிருந்து வாக்குமூலம் எடுக்க ஆரம்பித்தேன். "விபத்து நடந்த இடத்திற்கு நீர் வந்தபொழுது, அங்கே யாரை நீர் கண்டீர்?" என நான் ஜனாப் பலீல் கபூரைக் கேட்டேன். "இனி எந்தக் கேள்விகளுக்கும் விடையளிக்காதே"

## காலபேஸ் கார் விபத்து

### விடையளிக்க மறுக்குமாறு தூண்டியதாக வழக்கு

### புரக்டர் மீது புகார்

ஜனாப் மார்க்கருக்கு 6 வாரம் வெறுங் காவலும் 100 ரூ. அபராதமும்

ஜுலை மாதம் 12ந் தேதியன்று நடந்த காலபேஸ் கார் விபத்து சம்பந்தமாக போலீஸ் சூப்பரின்டெண்டு திரு. டப்ளியூ. ஏ. முல்லர் கேட்ட சில கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டாமென்று, ஜனாப் பலீல் கபூரை புராக்டர் ஜனாப் ஏ.எம். மார்க்கர் தூண்டியதாக, அவர்மீது கொழும்பு போலீஸ் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

### சபாநாயகரின் சான்றுப்படுத்தலுடன்

# 'பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்' சட்டம் 8ஆம் திகதி முதல் அமுல்



இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் 2024 ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி 'பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்' எனும் சட்டமூலத்தில் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (09) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024ஆம் ஆண்டு 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமாக 2024 ஒகஸ்ட் 8ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது. பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம் 2024 மே 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

# கீரி சம்பா, சீனி, கிழங்கு உட்பட பொருட்களின் விலை குறைப்பு

## லங்கா சதொச நேற்று அறிவிப்பு

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது. இதற்கமைய 260 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கீரி சம்பா 248 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வெள்ளை சீனி 09 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை 45 ரூபாவாலும், ஒரு கிலோ வெள்ளை கடலையின் விலை 42 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பாசிப்பயறு, கிறீன் பீன்ஸ் ஆகியவற்றின் விலை 30 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வற்றல் மிளகாய், வெள்ளை அரிசி, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலையும் குறைக்கப்பட்டுள்ளதாக, லங்கா சதொச அறிவித்துள்ளது.

# மாதாந்தம் 30 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

## அடுத்த 10 நாட்களுக்குள் ஆரம்பம்



நாட்டில் அடுத்த 10 நாட்களுக்குள் முட்டை இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக, இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இது தொடர்பான கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டார்.

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை 50 ரூபாவாக காணப்படுவதன் காரணமாக முட்டை இறக்குமதி தொடர்பாக அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கமைய மாதமொன்றுக்கு 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# இலங்கை, இந்திய வர்த்தக சம்மேளனத்தினர் துணைத்தூதுவர் வெங்கடேஸ்வரனுடன் சந்திப்பு



சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் டாக்டர் துரைசாமி வெங்கடேஸ்வரனை இலங்கை மற்றும் இந்திய வர்த்தக சம்மேளனத்தின் நிர்வாக இயக்குநர்கள் நேற்று (9) சந்தித்துள்ளனர்.

இலங்கை இந்திய வர்த்தக சம்மேளனத்தின் நிர்வாக இயக்குநர்களான முனைவர் சதீஷ் சிவலிங்கம் (சிரேஷ்ட உப தலைவர் மலையக மக்கள் முன்னணி) இந்திய தொழிலதிபர் டாக்டர் தி.இளங்கோவன், உயர் நீதிமன்ற வழக்கறிஞரும் தொழிலதிபருமான எஸ்.வேலஸ்ரீ சீமாட்டி, வழக்கறிஞர் வீ.அகிலா ஆகியோரே துணைத் தூதுவர் துரைசாமி வெங்கடேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடினர்.

06

# தமிழர் தரப்பு பொது வேட்பாளர் சுயேச்சையாகவே களமிறக்கம்

## ஓரிரு தினங்களில் கட்டுப்பணம் செலுத்துவோம்



தமிழர் தரப்பு பொது வேட்பாளர் சுயேச்சையாகவே களமிறக்கப்பட்டுள்ளதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எமது பொது வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் சுயேச்சையாக போட்டியிட முடியும். அதனால் அவர் சுயேச்சையாகவே போட்டியிடுகிறார். தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடக்கூடிய 75 தொடக்கம் 80 பேர் வரையானவர்களின் பெயர்களை பரிசீலித்தே முன்னாள் எம்.பி. அரியநேத்திரனை தெரிவு செய்துள்ளோம்.

இன்னமும் ஓரிரு நாட்களில் வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை செலுத்தவுள்ளோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பலரும் எமக்கு ஆதரவை தெரிவித்துள்ளனர். கட்சியின் முடிவு ஓரிரு நாட்களில் வெளிவருமென நம்புகிறோம். நாம் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறோம். எம்முடன் இணைந்து பயணிக்க விரும்புவோர் பயணிக்க முடியும்" என தெரிவித்தார்.

# யாழ். சர்வதேச புத்தக திருவிழா ஆரம்பம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**







'யாழ்ப்பாண சர்வதேச புத்தக திருவிழா 2024' நேற்று காலை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் புத்தக திருவிழாவை ஆரம்பித்து வைத்தார். எதிர்வரும் 11ஆம் திகதிவரை தினமும் முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை இந்த புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் புத்தகத் திருவிழாவில் இருபதுக்கும் மேற்பட்ட புத்தக விற்பனை நிலையங்கள், வெளியீட்டகங்கள், புத்தகங்கள் சார் அமைப்புகள் பங்குபற்றுகின்றன.

இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வெளிவரும் புத்தகங்கள் இந்தக் கண்காட்சியில் விற்பனை செய்யப்படவுள்ளன.

எமது சமூகத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலும் எழுத்தாளர்களை வெளிக்கொண்டு வரும் வகையிலும் எழுத்தாளர்கள் வாசகர்கள் சந்திப்புக்கான களமொன்றை உருவாக்கும் வகையிலும் யாழ்ப்பாண புத்தகத் திருவிழாவை 4 யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. அதுமட்டுமன்றி யாழ்ப்பாண சர்வதேச புத்தக திருவிழா இனி ஒவ்வொரு வருடமும் இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் முதியோர் என அனைத்து தரப்பினருக்குமான புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

### டிஜிட்டல் திரை பயன்பாட்டால்

# குழந்தைகளின் மூளை பாதிப்படையும் அபாயம்

## பெற்றோருக்கு வைத்தியர்கள் எச்சரிக்கை



கையடக்க தொலைபேசி மற்றும் டிஜிட்டல் திரைகளை பயன்படுத்த இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை அனுமதிப்பது பொருத்தமற்றதென வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் இனோகா விக்கிரமசிங்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குழந்தைகள் தொடர்ந்தும் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்தும் போது அவர்களின் மனநிலையில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்.

டிஜிட்டல் திரைகளை பயன்படுத்துவதனால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி வீதம் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தங்களது வேலைகளை இலகுவாக முன்னெடுப்பதற்காக பெற்றோர் தங்களது குழந்தைகளிடம் கையடக்க தொலைபேசிகளை வழங்குகின்றனர்.

எனவே பெற்றோர் குழந்தைகளை கையடக்க தொலைபேசி உள்ளிட்ட டிஜிட்டல் திரை பயன்பாட்டிலிருந்து இயலுமானவரை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து

சாகாமலே இருக்க மருந்து கிடையாது. அப்படி இருக்கும்போது உயிரைவிட நிலையான மானத்தைப் போற்றாமல், வாழ்க்கை மேம்பாட்டுக்காக ஒருவர், தமது பெருமையைக் குறைத்துக் கொள்வது இழிவான செயலாகும்.

# மக்களிடம் விதைக்கப்படும் நிறைவேறாத வாக்குறுதிகள்!

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் களம் பரபரப்படைந்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை இவ்வருடம் நடைபெறப் போவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் ஆகும்.

இம்முறை பலமுனைப் போட்டி நிலவுகின்றது. பலர் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். இத்தேர்தலில் வாக்காளர்களின் வாக்குகள் பிளவடையப் போகின்றன என்பது தெளிவாகின்றது. பலமுனைப் போட்டி நிலவுவதால் வாக்குகள் பிளவடைவது தவிர்க்க முடியாததாகின்றது. அதேசமயம் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளவர்கள் சிலர் மக்கள் மத்தியில் முன்னெடுக்கின்ற பிரசாரங்கள் நம்பகத்தன்மையற்றவையாகவும், நகைச்சுவைக்குரியவையாகவும் உள்ளன. நிறைவேற முடியாத திட்டங்களை அவர்கள் மக்கள் மத்தியில் அள்ளி வீசுகின்றனர். நம்பிக்கையற்ற வாக்குறுதிகளை அவர்கள் வழங்குகின்றனர்.

மக்கள் அரசியல் ஞானமற்றவர்கள் எனக் கருதியவாறுதான் அவர்கள் இவ்வாறான வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். மக்களை முட்டாளாக்க முடியுமென்ற நம்பிக்கையில்தான் இவ்வாறான போலி வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன என்பதை அம்மக்களே நன்கறிவர்.

அவர்கள் இவ்வாறான வாக்குறுதிகளை கூறுவதைப் பார்க்கையில், மக்கள் மத்தியில் வெறுப்பு தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். நாட்டின் பொருளாதார நிலைவரங்களை சற்றும் அறியாதவர்களாக அவர்கள் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான நம்பிக்கைகளை மக்கள் முன்பாக விதைக்கின்றனர் என்பது புரிகின்றது. பொருளாதார ஞானம் சற்றேனும் இல்லாதவர்களாக சிறுபிள்ளைத்தனமாக அவர்கள் பேசுகின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தொடர்பாக எதுவித அறிவும் இல்லாதவர்களாக, அதுபற்றிப் பேசுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் என்பது எமது உள்நாட்டு நிதிநிறுவனம் என்று நினைத்தவாறு, மக்கள் மத்தியில் பலவாறும் பேசுகின்றனர். தாங்கள் பதவிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் குறித்து மீளாய்வு செய்யப்படுமென்று அவர்கள் கூறுகின்றனர்.

அரசியல் ஆதாயத்துக்காக எதையுமே பேசலாம் என்பது போலவே சிலரின் வார்த்தைகள் அமைந்துள்ளன. எதைக் கூறினாலும் மக்கள் நம்புவார்கள் என்பதுதான் அரசியல்வாதிகள் சிலரின் எண்ணமாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இந்நாடு முன்னொருபோதும் முகம்கொடுத்திராத பொருளாதார நெருக்கடியை இரு வருடங்களுக்கு முன்னர் எதிர்கொண்டது. இந்நெருக்கடியினால் நாடு கடுமையாக வீழ்ச்சிக்கு உள்ளானது. மக்கள் மிகவும் மோசமான பாதிப்புகளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டனர். ஒட்டுமொத்த நாடும் வங்குரோத்து நிலைக்கு உள்ளானது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசியல் கொதிநிலையும் தீவிரமடைந்ததோடு, அன்றைய ஆட்சியாளர்கள் தமது பதவியை விட்டு அகல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இந்நிலையில் நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவும் இல்லை. இந்த இக்கட்டான சூழலில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொறுப்பையும் தலைமையையும் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். அதற்கமைய அவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்றது முதல் நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களின் விளைவாக எமது நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து படிப்படியாக மீட்சிபெற்று வருகின்றது. 'இலங்கை வங்குரோத்தான தேசம் அல்ல' என்று உலகமே ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் பயனாக இலங்கைக்கு ஏனைய நாடுகள் கடன் வழங்கக் கூடியதொரு சாதகமான நிலைமை தோன்றியுள்ளது. இவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அன்றைய யுகத்தை மீண்டுமொரு தடவை நினைவுபடுத்திப் பார்ப்பது முக்கியமாகும். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக இரவுபகலாக கிலோமீற்றர் தூரம் வரை வாகனங்கள் வரிசையில் நின்றன. நான்கு லீற்றர் பெற்றோலுக்காக இருபத்துநான்கு மணி நேரம் வீதியில் இரவுபகலாக காத்திருந்தோரும் உள்ளனர். இருபத்துநான்கு மணி நேரம் எரிபொருளுக்காகக் காத்திருந்து விட்டு, எரிபொருள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியோரும் உள்ளனர்.

எரிபொருள் கிடைக்காததன் காரணமாக நாட்டில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடி காரணமாக அநேக தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதனால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். வறியவர்கள் மாத்திரமன்றி நடுத்தர வர்க்கத்தினரும் கூட அன்றாட உணவுக்கே அல்லல்பட வேண்டியிருந்தது.

இவ்வாறான அவலநிலைமையை மாற்றியமைத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னரே நாட்டின் பொருளாதாரம் வளர்ந்தது. இன்று மக்கள் நிம்மதியுடன் வாழ்கின்றனர்.

நாட்டின் கடந்தகால நிலைமையை முற்றிலும் மறந்தவாறு உண்மைக்குப் புறம்பான தகவல்களை மக்களுக்கு வழங்குவது முறையல்ல.

editor.tkn@lakehouse.lk

# மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி மக்கா நகரில் ஆரம்பம்

சவுதி அரேபியாவின் மறைந்த மன்னர் அப்துல் அஸீஸின் பெயரிலான சர்வதேச அல் குர்ஆன் மனனப் போட்டி நேற்று 09 ஆம் திகதி முதல் 23 ஒகஸ்ட் வரை மக்காமா நகரில் நடைபெறுகிறது. இப்போட்டி நிகழ்ச்சிகள் தொடராக 15 நாட்கள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இறுதி நாளன்று பரிசில்கள் வழங்கப்படும். இலங்கை உட்பட பல நாடுகளில் இருந்தும் அல் குர்ஆனை மனனம் செய்த நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இம்முறை இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் சவுதி அரேபியா மேற்கொண்டுள்ளது. இலங்கை





இம்முறை இலங்கை சார்பாக செல்லும் போட்டியாளர் அல் ஹாபிழ் அப்துல் ரவூப் முஹம்மத் ஷிபாக்

நாணயப்படி 35 கோடி ரூபாவை பரிசில்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ள சவுதி அரேபியா, இப்போட்டியில் முதலாமிடத்தைப் பெறும் அதிர்ஷ்டசாலிக்கு 4 கோடி ரூபாவை வழங்க உள்ளது.

இரு புனித பள்ளிவாசல்களின் காவலரான சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் நேரடி பங்குபற்றுதல்களுடன் இஸ்லாமிய கலாசார அமைச்சர் அப்துல் லதீப் ஆல் ஷைக்கின் கண்காணிப்பில் ஆரம்பமாகியுள்ள சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி 44 ஆவது தடவையாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

அல் குர்ஆனுக்கும் குர்ஆனை மனனம் செய்தவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய அனைத்து கண்ணியங்களையும் கௌரவங்களையும் சவுதி அரேபிய அரசாங்கம் அன்று தொட்டு வழங்கி வருக்கிறது. உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அல் குர்ஆன் மனனப் போட்டிகளை நடத்தி வருகிறது.

சவுதி அரேபியாவின் நீண்ட கால நட்பு நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஊடாக கடந்த வருடம் தேசிய மட்ட அல் குர்ஆன் மனனப் போட்டி முதற்தடவையாக நடத்தப்பட்டது. சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் மாபெரும் பரிசுத் தொகையிலான இப்போட்டி இந்நாட்டில் நடத்தப்படுவதற்கான ஒத்துழைப்பையும் ஏற்பாடுகளையும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் அல் கஹ்தானி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்குபற்றிய அல் குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்கள் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுத்தனர்.

உலகில் குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்களுக்கு இப்போட்டியில் கலந்து கொள்ளவும் இலவசமாக புனித மக்காவை தரிசிக்கவும் புனித உம்ராவை நிறைவேற்றவும் வெற்றி பெறும் போது பெறுமதியான பரிசுகள் கிடைக்கவும் வழியமைத்துக் கொடுக்கிறது சவுதி அரேபியா.

இம்முறை இலங்கை சார்பாக புனித மக்காவுக்குச் போட்டியாளர் அல் ஹாபிழ் அப்துல் ரவூப் முஹம்மத் ஷிபாக் சென்றுள்ளார்.



அஷ்ஷேக் **எம்.எச்.ஷேஹுத்தீன்**
மதனீ (பி.ஏ), பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

# துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் எம்.எச்.எம் அஷ்ரப் நினைவுதின நிகழ்வு

இலங்கை துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸ், முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் நினைவு தின பேச்சு, முஸ்லிம் ஊழியர்களது பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் மற்றும் பல்கலைக்கழகம் சென்றுள்ளவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல் ஆகியவற்றை அண்மையில் நடத்தியது.

அத்துடன் அதிகார சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற முஸ்லிம் ஊழியர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மஜ்லிசின் தலைவர் இல்ஹாம் மசூர் மௌலானா அங்கு உரையாற்றுகையில்,

மறைந்த எம்.எச்.எம் அஷ்ரப் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையில் தொழில் தந்தமையால் தான் தாங்கள் திறமையாக தொழில் செய்து கைநிறைய சம்பளம் பெற்று எங்களது வாழ்க்கை சீராக செல்கின்றது. இந்த ஊதியத்தினால்தான் எங்களது பிள்ளைகள் கொழும்பிலும் ஊரிலும் கல்வி கற்று பொறியியலாளர்கள், வைத்தியர்களாக பட்டதாரிகளாக உள்ளனர். அதற்காக அவரை நாங்கள் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். அன்னாரை நாம் வருடாந்தம் நினைவு கூர்ந்து அவர் பெயரினால் இவ்வாறான புலமைப்பரிசில் திட்டத்தினை கடந்த 4 வருடகாலமாக செயற்படுத்துகிறோம். அவர் ஆரம்பித்து வைத்த துறைமுக இப்தார் நிகழ்வினையும் தொடர்ச்சியாக செய்து வருகின்றோம் என தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு கொழும்பில் உள்ள தபால் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் மஜ்லிசின் தலைவர் இல்ஹாம் மௌலானா தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை துறைமுக அதிகார சபையின் ஊழியர் ஒலிபரப்பாளர் திக்குவலை சும்ரி நெறிப்படுத்தினார்.

பிரதம பேச்சாளர்களாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர், பேராசிரியர் எம்.எஸ்.எம் ஜலால்டீன, முன்னாள் புனா' வாழ்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம். நஹியா, முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன் ஆகியோர் பங்கேற்றனர். 300 இற்கும் மேற்பட்ட துறைமுக முஸ்லிம் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.





அஷ்ரப் ஏ சமத்...

# கலைமகள் மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா

நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் மனித நேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் ஒருங்கிணைப்பில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான திறன்வகுப்பறை (Smart panel with ops 86 inch, lecture hall chairs30, internet connection, curtains for the room) திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை அதிபர் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

அமரர் கலாநிதி சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோபனா சுதர்ஷன், நீலன் சுதர்சன் நிதியுதவியில் (Rs 1,163,150) இந்திறன் வகுப்பறை மனிதநேய அறக்கட்டளை ஸ்தாபக தலைவர் கை. அரவிந்தனின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளாக மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர்களான ஆர். சிரஞ்சீவி, திருமதி சாந்தி சிரஞ்சீவி, உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, மற்றும் அம்பாறை விஞ்ஞான ஒன்றிய ஸ்தாபக தலைவர் தி.கோபிநாத், ஸ்தாபகர் பொறியியலாளர் வ.யதுர்சன், ஆசிரிய ஆலோசர்களான எஸ். மோகன், ஆர். சந்திரகுமார் உள்ளிட்டவர் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கே. மதிவண்ணன் பழைய மாணவர் மன்ற தலைவர் லோஷனன் விஞ்ஞான ஒன்றிய உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மனித நேயம் அமைப்பின் இச்சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தினால் திரு. திருமதி. சிரஞ்ஜீவி தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.





காரைதீவு குறூப் நிருபர்...

# பங்களாதேஷை வழிநடத்தும் 16 பேர் கொண்ட வல்லுநர் குழு

பங்களாதேஷில் இப்போது முகமது யூனுஸ்(வயது 84) தலைமையிலான இடைக்கால அரசு பதவியேற்றுள்ள நிலையில், அவருடன் 16 பேரைக் கொண்ட வல்லுநர் குழுவும் பதவியேற்றுள்ளது. வங்கதேசம் மிகவும் இக்கட்டான சூழலில் இருக்கும் நிலையில், அந்நாட்டை வழிநடத்தும் பொறுப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் வங்கதேசத்தில் அமைந்துள்ள இடைக்கால அரசின் தலைமை ஆலோசகராகப் பதவியேற்றார். இது அந்நாட்டில் பிரதமருக்கு இணையான பதவி என்று சொல்லப்படுகிறது. நேற்றுமுன்தினம் மாலை அவர் டாக்காவில் பதவியேற்றார். அவருடன் சேர்ந்து 16 பேர் பதவியேற்றுக் கொண்டனர். அவர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்கவில்லை. மாறாக ஆலோசகர்களாகப் பதவியேற்றார்கள்.



இந்த இடைக்கால அரசில் இருப்போரில் ஒரே ஒருவர் மட்டுமே இராணுவ பின்புலம் கொண்டவராக இருக்கிறார். மற்றவர்கள் சாதாரண நபர்களாகவே உள்ளனர். வரலாறு காணாத நெருக்கடியில் வங்கதேசம் சிக்கித் தவித்து வரும் நிலையில், அந்நாட்டை இந்தக் குழு வழிநடத்த உள்ளது. மேலும், தேர்தல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகாரம் கைமாறுவதையும் இவர்கள் உறுதி செய்வார்கள். இக்குழு தேர்தலை மேற்பார்வையிடும்.

ஷேக் ஹசீனாவுக்கு எதிரான போராட்டங்களைத் தலைமையேற்று நடத்திய மாணவர் குழுவில் இருந்து நஹித் இஸ்லாம் மற்றும் ஆசிப் மஹ்மூத் ஆகிய இரண்டு மாணவர்களும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஹசீனா நாட்டை விட்டு வெளியேறிய பிறகும் சில இடங்களில் வன்முறை தொடர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

# ஐந்து வருடகால சம்பவங்களின் பூதாகரமான வெடிப்புதான் பங்களாதேஷ் கலவரங்கள்!



பங்களாதேஷில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தையடுத்து அங்கு ஆட்சி கவிழ்ந்திருக்கிறது. அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனா திங்கட்கிழமை இந்தியத் தலைநகர் டெல்லிக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

பங்களாதேஷில் இன்று இடம்பெறுகின்ற பிரச்சினை என்பது கடந்த ஐந்தாண்டுகளில் சிறிது சிறிதாக நடந்த பல பிரச்சினைகளின் வெளிப்பாடு ஆகும். தொடர் மனித உரிமை மீறல்கள், அளவுக்கு அதிகமான ஊழல், அரசின் அதீதமான கட்டுப்பாடு போன்றவற்றால் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், இடஒதுக்கீட்டை முன்னிட்டு எழுந்த ஆர்ப்பாட்டங்கள், மற்றைய பிரச்சினைகளையும் மனதில் வைத்து மிகப் பெரிய கலவரம் உருவெடுத்தது.

ஷேக் ஹசீனா சீனாவிலிருந்து முதலீடுகளை ஈர்க்க அந்நாட்டிற்கு சென்றார். பல மாதங்களாகத் திட்டமிட்ட பயணம் அது. அவர் திட்டமிட்டு சென்ற காரியம் என்ன ஆனதெனத் தெரியாத நிலையில், அவர் நாடு திரும்பினார்.

ஆனால், அவர் நாடு திரும்பிய தருணத்தில் கலவரம் தொடங்கியிருந்தது. அவர் நாட்டில் இருந்திருந்தால் இரும்புக் கரம் கொண்டு அதனை ஒடுக்கியிருப்பார். அடுத்தடுத்த தலைமைகள் இருந்திருந்தால், முடிவெடுத்து கலவரத்தை ஒடுக்கியிருப்பார்கள். ஆனால், அங்கே அப்படியில்லை. அவருக்கு அடுத்து இருந்தவர்கள் முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாக இல்லை.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு அவருடன் இருந்த ஆலோசகர்கள், இப்போது அவருடன் இல்லை. இதெல்லாம் சேர்ந்து இந்த நிலைக்கு இட்டுவந்துவிட்டது.

இந்த இட ஒதுக்கீடு விவகாரம் கலவரம் தொடங்க ஒரு காரணமாக இருந்ததே தவிர, அதுவே மொத்த பிரச்சினையுமல்ல. பல்வேறு அதிருப்திகள் இருந்தன. இட ஒதுக்கீடு விவகாரத்தை சரிசெய்துவிட்டால்கூட மற்ற பிரச்சினைகளைச் சரி செய்திருக்க முடியாது. அங்கே சாதாரண கூலி வேலை செய்பவர்களின் நிலை மோசமாக இருக்கிறது. இடநெருக்கடி இருக்கிறது. இப்படி பல்வேறு அதிருப்திகள் சேர்ந்துதான் இதுபோன்ற கலவரமாக வெடித்திருக்கிறது.

இதுபோன்ற அதிருப்தியை வாக்குச்சீட்டின் மூலமாகக் காட்டலாம் அல்லது கலவரத்தின் மூலமாகக் காட்டலாம். பங்களாதேஷ் மக்கள் கலவரத்தின் மூலமாகக் காட்டுகிறார்கள். ஆனால், கலவரம் செய்பவர்களைப் பொறுத்தவரை நீண்ட கால இலக்கு இருப்பதைப் போலத் தெரியவில்லை.

இந்தக் கலவரத்தின் பின்னால் யாராவது தலைவர்கள் இருந்தால், ஒருவேளை அவர்களுக்கு சில நோக்கங்கள் இருக்கலாம். இந்தக் கலவரக்காரர்களைப் பொறுத்தவரை அப்படி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

வங்கதேசத்தைப் பொறுத்தவரை மூன்று பக்கமும் இந்தியா. ஒரு பக்கம் கடல். சற்று தூரம் சென்றால் மியன்மார். இந்தச் சூழலில் எல்லோரோடும் நட்பு பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறது வங்கதேசம்.

பங்களாதேஷ் உருவாவதற்கு முக்கிய காரணமே இந்தியாதான். ஆகவே வங்கதேசம் இந்தியாவுக்கு மிகவும் நெருங்கிய நாடு. யார் பிரதமராக இருந்தாலும் அதுதான் நிலை. இம்மாதிரி சூழலில் வெளிநாட்டு சதி என்பதெல்லாம் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. இது தவிர, அமெரிக்காவின் முதலீடுகளும் பெரிய அளவில் வங்கதேசத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

பங்களாதேஷில் தங்கியுள்ள ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகளுக்காகவும் மற்ற சில உதவியாகவும் 2017ஆம் ஆண்டில் இருந்து வருடத்திற்கு 2 பில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கிவருகிறது. அதுதவிர, உலக வங்கி, சர்வதேச நிதியம் ஆகியவையும் அந்நாட்டிற்கு தொடர்ந்து உதவிகளைச் செய்துவருகின்றன.

ஆட்சியாளர்கள் திடீரென தாங்கள் சார்ந்திருக்கும் சித்தாந்தத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்தால் இதுபோல நடக்க வாய்ப்புண்டு. அதிருப்தி என்பது எப்போது வேண்டுமானாலும் வரலாம். அப்படியான சூழலில், ஷேக் ஹசீனாவை மாற்றுவதற்கான வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. காலிதா ஷியா சிறையில் தள்ளப்பட்டு விட்டார்.

நோபல் விருதுபெற்ற முகமது யூனுஸ் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டு விட்டது. இதெல்லாம் சேர்ந்துதான் இப்படியான சூழலை உருவாக்கியிருக்கிறது.



## பாகிஸ்தான் போன்று இராணுவ ஆட்சி ஏற்படும் சாத்தியமுண்டா?



மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். வங்கதேசம் ஒரு இஸ்லாமிய நாடாக இருந்தாலும் ஷேக் ஹசீனா ஒரு மதச்சார்பற்ற தலைவராக இருந்தார். மற்றொரு பக்கம் அங்கே சில அடிப்படைவாத அமைப்புகளும் வளர்ந்து வந்தன. அவர்களும் இந்த புகைச்சலுக்கு தூபமிட்டார்கள்.

அங்கு உடனடியான தீர்வாக இடைக்கால அரசு வந்துள்ளது. இடைக்கால அரசில் இராணுவத்தின் செல்வாக்குதான் அதிகம்.

தலைநகர் டாக்காவில் மட்டுமல்லாமல், ஆங்காங்கே கலவரம் நடந்துள்ளது. அமைதியின்மை தொடர்கிறது. முதலில் அங்கு ஏற்பட்டிருக்கும் கலவரத்தை அடக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் தேர்தல் நடத்தப்படலாம். இந்துக்களும் குறிவைத்துத் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் அச்சத்தினால் இந்தியாவுக்கு வருவதற்கு முயற்சிக்கிறார்கள்.

இப்போதைய சூழலில் ஜனநாயகம் மட்டும்தான் ஒரே தீர்வு. இராணுவ ஆட்சியோ, சர்வாதிகாரியோ வருவதற்கான சூழல் அங்கே இல்லை. பாகிஸ்தானைப் போன்ற நிலை இங்கே வராது. தேர்தல் அரசியல்தான் ஒரே தீர்வு.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் இல்லையென்றால் இப்போதைய வங்கதேசம் உருவாகியிருக்காது. ஆனாலும் அவரது சிலையை கலவரக்காரர்கள் வெறித்தனமாகத் தாக்கினர்.

இந்த விவகாரத்தில் இந்தியா நேரடியாக எந்த முடிவும் எடுக்க முடியாது. அதே நேரத்தில் இந்தியா இல்லாமல் வங்கதேசம் செயல்படவும் முடியாது.

இப்போதைய சூழலில் இநதியா ஷேக் ஹசீனாவுக்கு புகலிடம் அளித்திருக்கிறது. அது குறுகியகால புகலிடமாக இருக்கலாம் அல்லது நீண்ட கால புகலிடமாக இருக்கலாம். அடுத்ததாக அந்நாட்டின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.

மூன்றாவதாக மீண்டும் மக்களாட்சியை அங்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அங்குள்ள அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். ஏற்கனவே இந்தியா அவற்றைச் செய்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பைப் பொறுத்தவரை, வங்கதேசம் மிக முக்கியமான கூட்டாளி. ஒரு பாதுகாப்பு அரண். ஆகவே, அதன் நலனின் இந்தியா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகும்.

# பிரித்தானியாவில் தீவிரமாகப் பரவும் வலதுசாரிகளின் தீவிர வன்முறைகள்




பிரித்தானியாவில் ஒருமாத கால தொழிற்கட்சி ஆட்சியின் பின்னர், கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப்பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. இதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருகிறது.

பிரித்தானியாவில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்த வன்முறைகளை நடத்துவதாக பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கண்டித்துள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதியன்று பிரிட்டனின் சவுத்போர்ட் நகரில் நடைபெற்ற டெய்லர் சுவிஃப்ட் யோகா மற்றும் நடனப் பயிலரங்கில் கலந்துகொண்ட மூன்று சிறுமிகள் கொல்லப்பட்டனர்.

இதன்பின் இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தின் பல பகுதிகளில் வெளிநாடுகளில் இருந்து குடியேறுபவர்களுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டங்கள் பல இடங்களில் வன்முறையாக மாறின. இதனால் பிரிட்டன் முழுக்க கலவரம் ஏற்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் கடந்த ஜூலை மாதம்தான் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் ஆட்சியில் இருந்த கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. எதிர்க்கட்சியாக இருந்த தொழிலாளர் கட்சி மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில், கெய்ர் ஸ்டார்மர் பிரதமரானார்.




இதற்கிடையே தொழிலாளர் கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப்பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன.

பிரிட்டனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதே இதுபோன்ற தாக்குதல்களுக்குக் காரணம் எனக் கூறி அங்கே பல நகரங்களில் போராட்டங்கள் வெடித்தன.

மூன்று சிறுமிகள் உயிரிழக்கக் காரணமாக இருந்த அந்தத் தாக்குதலில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டில் இருந்து குடியேறியவர் என்றும் அவர் ஒரு இஸ்லாமியர் என்றும் தவறான தகவல் பரவியது. இதனால் குடியேற்றத்தை எதிர்க்கும் குழுக்கள், முஸ்லிம் எதிர்ப்புக் குழுக்கள் திடீரென இந்தப் போராட்டங்களை ஆரம்பித்தன. அதுவே இப்போது வன்முறையாக மாறியுள்ளது.

அதேநேரம் இந்தச் சம்பவத்தில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் இல்லை என்றும் அவர் பிரிட்டனில் பிறந்தவர்தான் என்றும் பொலிசார் விளக்கமளித்துள்ளனர். மேலும், கைதான நபரின் குடும்பம் கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றுவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும், இதை ஏற்க மறுத்து அங்கே போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இங்கிலாந்தில் லிவர்பூல், பிரிஸ்டல், ஹல் மற்றும் ஸ்டோக்அன்ட்ரென்ட் மற்றும் பிளாக்பூல் எனப் பல நகரங்களில் இந்த வன்முறை போராட்டங்கள் பரவியுள்ளன. இந்த விவகாரத்தில் பொலிசார் ஏராளமானோரை இதுவரை கைது செய்துள்ளனர்.

மான்செஸ்டர் மற்றும் பெல்ஃபாஸ்டில் தாக்குதல்கள் நடந்த நிலையில், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. லிவர்பூலில் ஒரு நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த வன்முறையில் பொலிசார் பலரும் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்தப் போராட்டங்களை நடத்துவதாக அந்நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் விமர்சித்துள்ளார்.

மேலும், சிறுமிகள் உயிரிழக்கக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்த அவர், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

கன்சர்வேடிவ் கட்சியே இங்கிலாந்தை தீவிர வலதுசாரி வன்முறைக்கு திறந்துள்ளனர் என்ற குற்றஞ்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

தீவிர வலதுசாரி வன்முறைக்கு காரணம் கன்சர்வேடிவ்கள் என இங்கிலாந்து பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னாள் ஆலோசகர் டேம் சாரா கான் தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது.


முன்னைய கன்சர்வேடிவ் அரசாங்கம் கலாசார வெறுப்பு நிகழ்ச்சி நிரலுடன் தீயை மூட்டுவதன் மூலமும், நாட்டின் சில பகுதிகளில் வெடித்துள்ள தீவிர வலதுசாரி வன்முறைக்கு இங்கிலாந்தை பரந்த அளவில் திறந்து விட்டதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

தீவிர வலதுசாரிகள் சமூக ஊடகங்களில் வன்முறையைத் தூண்டுவதற்கு சட்டத்தில் உள்ள இடைவெளிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதே நேரத்தில் பல அரச நிர்வாகங்களின் உயர்மட்ட அரசியல்வாதிகள் கலாசாரப் வெறுப்புகளை நடத்துவதன் மூலம் ஆதாயத்தைப் பெற முயன்றனர் என கான் கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஞாயிற்றுக்கிழமை தீவிர வலதுசாரி வன்முறைகளை கண்டனம் செய்தார். பல நாட்கள் குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஹோட்டல் மீதான தாக்குதல் அதன் உச்சக்கட்டம் ஆகும்.

கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிராக தனது தொழிற்கட்சி ஒரு தீர்க்கமான தேர்தல் வெற்றியைப் பெற்ற பின்னர் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதமராக பதவியேற்றார் ஸ்டார்மர்.

பிரித்தானியைவைப் பொறுத்தவரைக் கடந்த 2011இல் கடைசியாக மிகப்பெரிய வன்முறை ஏற்பட்டது. அப்போது லண்டனில் கறுப்பினத்தவர் ஒருவரை பொலிசார் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து பல ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கிய போராட்டங்களை நடத்தினர். அப்போது சில இடங்களில் வன்முறை வெடித்தன. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாரிய வன்முறை வெடித்துள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# மனித–யானை மோதல் சம்பந்தமாக மாணவருக்கு பாதுகாப்பு செயலமர்வு

மனித-யானை மோதலை தவிர்த்து நாட்டில் பயமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு செயலமர்வொன்று ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பினால் அநுராதபுரம்,ஹொரவப்பொத்தானை மந்தாகனி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் பங்கேற்ற மேற்படி செயலமர்வில் மனித-யானை மோதல் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

யானையின் வாழிடம் மனிதர்களினால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதனாலும், சேனைப்பயிர்ச் செய்கை, நவீன நகரமயமாக்கல், தொழிற்சாலைகள் அமைத்தல், இயற்கை நீர்நிலைகள் அழிக்கப்படுதல் காரணமாகவும் காட்டில் சுதந்திரமாக நடமாடிய யானைகள் உணவு மற்றும் நீர் தேடி மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மனித உடமைகளை சேதப்படுத்துவதாலும், பெறுமதியான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதாலுமே பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது. இந்த செயலமர்வு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது, இது போன்ற ஒரு திட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவதற்கான கதவுகளைத் திறந்தமை பாராட்டத்தக்க விடயமாகும். கிராமத்தில் உள்ள அடிமட்ட அமைப்புகளுடன் நேரடியாகப் பணியாற்றுவதை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்டு யானைகளின் மோதலை கட்டுப்படுத்த பல வழிகளை ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

முக்கியமாக மனித உயிர்களை காப்பாற்றுவதற்காக யானை வேலிகளில் கவனம் செலுத்துகிறோம். இது விவசாயிகளை வேலி மற்றும் அதன் பராமரிப்பில் பயிற்சி பெற ஊக்குவிக்கும் என நம்புகிறோம் என்று இந்நிகழ்வில் யானை-மனித மோதல் முகாமைத்துவம் தொடர்பான பிரதான உரையாற்றிய பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சுதேஷ் ருவிந்த தெரிவித்தார்.

யானைகளுடன் மனிதர்கள் எவ்வாறு பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பது இங்கு விளக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் ஆணையாளர், சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர், அதிபர்கள் ஆகியோரும் அர்த்தமுள்ள உரைகளை வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் சுற்றாடல் அதிகார சபையினால் நடத்தப்பட்ட நிகழ்வில் பச்சைப் பதக்கம் பெற்ற மாணவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது.







எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)




# பிரணவம் அறக்கட்டளை, திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற ஓராண்டு நிறைவு விழா




திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையினதும், திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி பிரணவம் அறக்கட்டளைக்கும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்துக்கும் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாசி வழங்கி சொற்பொழிவாற்றவுள்ளார். இந்த அருளாசி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2024.08.25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் ஸ்ரீ கஜலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அருளாசி வழங்கலைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்குகிறது.

# இன்றைய பலன்கள்

(10.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :**
வேலைக்கு செல்லும் பெண்கள் பயணங்களில் கவனக்குறைவால் பொருட்களை இழக்க நேரலாம்.

**ரிஷபம் :**
பூர்வீக சொத்தில் இருந்து எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணியை சிறப்பாக செய்து உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவார்கள்.

**மிதுனம் :**
போட்டிகளை சமாளிக்க பங்குதாரர்களோடு ஆலோசனை செய்வீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம் :**
புதிய நபர் வருகையால் தொழில் ரீதியான முன்னேற்றம் ஏற்படக் கூடும். வியாபார அபிவிருத்திக்கான முயற்சிகளை செயல்படுத்த திட்டமிடுவீர்கள்.

**சிம்மம் :**
உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர் விருப்பு ஓய்வு பெற்று வேறு வேலைகளுக்கு செல்லக்கூடும். அதிக முதலீடுகளோடு ஒரு நபரை இணைத்துக் கொள்ள முற்படுவீர்கள்.

**கன்னி :**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**துலாம் :**
குடும்பத்தில் நடைபெறும் உங்கள் நிகழ்ச்சிக்காக உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் வருகை தருவர்.

**விருச்சிகம் :**
குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு தொல்லைகளை சுலபமாக சமாளித்து விடுவீர்கள்.

**தனுசு :**
குடும்பத்தில் பழைய கடன் பிரச்சினை தலை தூக்கலாம்.

**மகரம் :**
லாபம் பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெற வழி பிறக்கும்.

**கும்பம் :**
பணிகளை விரைந்து முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு லாபம் பெருகும்.

**மீனம் :**
கூட்டுத் தொழில் நன்றாக நடைபெற்று நல்ல லாபம் கிடைக்கும். குடும்பம் சீராக நடைபெறும். பெண்கள் உறவினரில் நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வர்.

## ஐக்கிய மக்கள் சக்தி தவிசாளர்...

சரத் பொன்சேக்கா அண்மையில் கட்டுப்பணம் செலுத்தினார். கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருந்த சரத் பொன்சேக்கா, கடந்த 05ஆம் திகதி கட்டுப்பணம் செலுத்தினார்.

மக்களின் கோரிக்கைக்கமைய தாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டில் சரத் பொன்சேக்கா பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக...

அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமென்று, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும் தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு, ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆவணம், ஓய்வு பெற்றோருக்கான ஆவணம் இவற்றிலொன்றை வாக்களிக்க பயன்படுத்த முடியும்.

இவற்றில் எதுவும் இல்லாத பட்சத்திலேயே தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தலுக்காக தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்படுமென்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கெஹெலியவின் மனு மீதான...

நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு மீதான உத்தரவு அறிவிப்பு நேற்று (09) ஒத்திவைக்கப்பட்டது.

இந்த உத்தரவுக்கான அறிவிப்பு நேற்று (09) இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி அறிவிக்கப்படுமென்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அறிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவால் முன்வைக்கப்பட்ட மனு மீதான விசாரணைக்கு அனுமதிப்பதா?, இல்லையா? என்பது தொடர்பான தீர்மானம் மற்றும் அவரை பிணையில் விடுதலை செய்வது தொடர்பாகவும் அன்றையதினம் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹரின், மனுஷவின்...

பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்து, கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றமையே இதற்கு காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு, கட்சி உறுப்பினர் பதவியை இரத்து செய்ததை எதிர்த்து ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்காரவும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கிலேயே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கை, இந்திய (3ஆம்பக்கத் தொடர்ச்சி)

மலைநாடு மற்றும் வட, கிழக்கில் முதலீடுகளை செய்வதன் மூலம் சிறுகுறு வர்த்தகம், உணவுப் பொருள் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் கால்நடை துறையிலும் வளர்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பது தொடர்பாக இவர்கள் கலந்துரையாடினர். இரு நாடுகளின் தூதரகங்கள் ஊடாக பரஸ்பரமாக இரு தரப்புகளும் நன்மை பெறும் வகையில் வர்த்தகம் சார்ந்த பல்வேறு அமைப்புகளையும் இணைத்து அரசு துறை, தனியார் மற்றும் வெளியுறவு ரீதியிலான பங்களிப்பை ஒருங்கிணைப்பதற்கும் துணைத் தூதுவருடன் இணக்கம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறார்களுக்கு காய்ச்சலுடன்...

சிறுவர்களுக்கு காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேலாக நீடிக்குமாயின் உடனடியாக அருகிலுள்ள வைத்தியரை நாடி வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்திய வைத்தியர்கள், சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பது பெற்றோரின் கடமையெனவும் சுட்டிக்காட்டினர்.

## அவசர தேவைக்கு...

கடவுச்சீட்டு அவசரமாக தேவைப்படாதவர்களை எதிர்வரும் ஒக்டோபர்வரை காத்திருக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

ஒக்டோபர் மாதத்திலேயே சர்வதேச தராதரத்துடனான கடவுச்சீட்டு வழங்கப்படுமெனவும், அவர் குறிப்பிட்டார். சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் நியமங்களை பூர்த்தி செய்யும் புதிய இகடவுச்சீட்டு ஒக்டோபர் மாத இறுதியில் வழங்கப்படுமென தெரிவித்த அவர், இது உலகளாவிய கடவுச்சீட்டு சுட்டெண்ணில் இலங்கையின் நிலைமையை மேம்படுத்த உதவுமென்றார். புதிய கடவுச்சீட்டில் உரிமையாளரின் அனைத்து விடயங்களையும் சேமித்து வைக்கும் மைக்ரோசிப்காணப்படும். இதுஉலகெங்கிலுமுள்ள விமான நிலையங்களில் உரிமையாளர் தொடர்பான தகவல் பெறுவதை இலகுவாக்குமெனவும், அமைச்சர் கூறினார். தற்போதைய கடவுச்சீட்டால் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பான தான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், விமான நிலையங்களில் சோதனைகள் இடம்பெறும் போது மக்கள் எதிர்காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ள மாட்டார்களெனவும் குறிப்பிட்டார்.

## கெய்ரோ வர்த்தக சம்மேளன நிகழ்வில்...

மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட எகிப்தின் முதல் மற்றும் மிகப்பெரிய வர்த்தக சம்மேளனமாகும். இரு நாடுகளுக்குமிடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதற்கான குறிப்பாக விவசாயம், ஆடை உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க மற்றும் எரிசக்தி சுற்றுலா உள்ளிட்ட துறைகள் குறித்த ஆக்கபூர்வமான விவாதத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தியது. "பரஸ்பர வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக இலங்கை வழங்கும் கவர்ச்சிகரமான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய எகிப்திய வர்த்தக சமூகத்திற்கு அன்பான அழைப்பை நான் விடுத்தேன். நமது எதிர்கால ஒத்துழைப்புகள் இருதரப்பு வர்த்தகம் மற்றும் வலுவான பொருளாதார உறவுகளை அதிகரிக்குமென நான் நம்புகிறேன்" அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

## ரூ. 1,700 சம்பள அதிகரிப்பை...

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான சிக்கல்களை தீர்க்கும் வகையில் சம்பள நிர்ணய சபைக்கு அந்த விடயம் உள்வாங்கப்பட்டுள்ளது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அது தொடர்பில் சம்பள நிர்ணய சபை எத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டாலும் நிர்ணயித்த படி அதே சம்பளத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளன. அதனயடுத்தே மேற்படி விடயம் சம்பள நிர்ணய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங்கும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரியநேத்திரன் தெரிவு குறித்து...

உறுப்பினர் பா.அரியநேத்திரன் தொடர்பில் 11ஆம் திகதி முடிவெடுக்கப்படுமென தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சி ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முன்னர் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் பொது வேட்பாளராக 2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாளை 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சியின் மத்திய குழு கூடி ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ளவுள்ளது. அதன் பின்னரே கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அறிவிக்கப்படுமென்ற கட்சி நிலைப்பாட்டை எடுக்க முன்னர், கட்சியின் உறுப்பினர் பொது வேட்பாளராக போட்டியிட தீர்மானித்த விடயம் தொடர்பில் அக்கூட்டத்தில் கலந்துரையாடப்படும் எனத் தெரிவித்தார். பொது வேட்பாளராக அரியநேத்திரன் அறிவிக்கப்பட்ட பின்னர் என்னை வந்து சந்தித்து விடயத்தை தெரியப்படுத்தி சென்றுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

## பீல்ட் மார்ஷலின் இராஜினாமா...

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா அரசியலுக்கு பொருந்தாதவர் என்றும், அவர் யுத்தத்தில் ஜெனரலாக இருந்தாலும், அரசியலில் கோப்ரல் போன்றவர் என்றும் அலவத்துவல எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

"2024 ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் வெற்றி தொடர்பில் நாட்டில் நிரந்தரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பெரும்பான்மையான சிங்கள வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளனர். தற்போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆகிய அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளும் தலைவர்களும் கைகோர்த்து வருகின்றனர். இது ஒரு வரலாற்று தருணம். எதிர்காலத்தில் நாட்டிலுள்ள அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியே நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். இவ்வாறானதொரு ஜனாதிபதி நாட்டில் நியமிக்கப்பட்டால் மாத்திரமே நாட்டில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் தீர்வுகளை வழங்க முடியும்" எனத் தெரிவித்தார்.

## ரணில் போன்ற தலைவரை ...

போதே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர் இந்த நாட்டில் பிறந்ததால் எமது நாட்டுக்கு அவ்வாறானதொரு கதி அப்போது ஏற்படவில்லையென நினைவு கூர்ந்த அவர், அன்றைய ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறிய போது அரசை அமைத்து நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எனவும் தெரிவித்தார். அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இம்மாநாட்டில் மேலும் உரையாற்றும் போது,

"இன்று இது மிகவும் சிறப்பான பெண்கள் சந்திப்பு என்றே கூற வேண்டும்.

இதற்கு முன்னரும் பெண்கள் மாநாடுகளை நடத்தியிருந்தாலும், எனது 32 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் பல கட்சிகள் பங்கேற்கும் மகளிர் மாநாட்டில் நான் பங்கேற்பது இதுவே முதல்முறை. இன்று நாம் ஏன் ஒன்றாக இருக்கிறோம்? அதற்கு உரையாடல்கள், விவாதங்கள், வாதங்கள் தேவையில்லை. பங்களாதேஷின் நிலைமையை தொலைக்காட்சி முன்னின்று பார்த்தால், நாங்கள் ஏன் ஒன்றாக இணைந்தோம் என்பது தெளிவாகத் தெரியும்.

பங்களாதேஷ் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் பாராளுமன்றத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இதுவரை 20 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்த போரட்டக்காரர்ககளின் செயற்பாடுகளை தொலைக்காட்சியில் பார்க்கும் போது எமது நாட்டிலும் அன்றையதினம் அது போன்ற ஒன்றுதான் நடந்தது என்பது தெளிவாகின்றது.

பங்களாதேஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றுலா விடுதிகள் மற்றும் அரச நிறுவனங்களை எரித்து அழித்துள்ளனர். பங்களாதேஷ் முழுவதும் நெருப்புக் குவியல் ஆகிவிட்டது. இவ்வாறான நிலையில் இன்று பங்களாதேஷ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவரை தேடிக்கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவர் இந்த தாய் நாட்டுக்கு இருந்தமையினால் அவ்வாறானதொரு நிலைமையை நாம் அப்போது எதிர்கொள்ளவில்லை. அத்துடன் நாட்டின் முன்னாள் தலைவர் நாட்டை விட்டு வெளியேறிய போது, இந்த தாய்நாட்டில் இரத்தம் சிந்துவதற்கு இடமளிக்காமல் அரசாங்கத்தை நிறுவி நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இன்று நாட்டில் சரியான தீர்மானங்களை எடுக்கும் பெண்களாகிய நாம் அவரின் வெற்றிக்காக கட்சி நிற பேதங்களை ஒதுக்கி ஒரே குடும்பமாக ஒன்றிணைந்துள்ளோம்" எனத் தெரிவித்தார்.

## நாட்டை மீட்டெடுக்கும் பணிக்காக...

நாட்டின் நலனுக்காக இரண்டு வருட காலம் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக சஜித் பிரேமதாசவுக்கு பெருமையுடன் நன்றி கூறுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்பும் பணிக்காக சென்றவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியினர். நாட்டை அபிவிருத்தியில் முன்னோக்கி கொண்டு செல்லும் முயற்சியில் அவர் விரும்பவில்லை. நாட்டை நேசிப்பவர் என்ற ரீதியில் நாட்டுக்கு ஆற்றிய சேவைக்காக நன்றி கூற வேண்டும். அவர் அதனை செய்யவில்லை' என்றும் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறினார். பத்தரமுல்லையில் நேற்று (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டார். பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்த அமைச்சர்களின் எதிர்வரும் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிப்பதற்காக இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தலை வணங்குவதாக முன்னாள் அமைச்சர்கள் தெரிவித்தனர். அந்த நேரத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதன் பின் விளைவுகளை தாங்கள் அறிந்திருந்ததாகவும் எனினும் நாட்டு நலனுக்காக இந்த சவாலை தாங்கள் ஏற்றுக்கொண்டதாகவும் சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். ஜனாதிபதியை போன்று தானும் மனுஷ நாணயக்காரவும் இன்று முதல் சுதந்திரமாக செயற்படுவோம் என தெரிவித்த ஹரின் பெர்னாண்டோ, புதிய அரசியல் பயணமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## அரச, தனியார் ஊடகங்களின்...

ஊடகத்துறை அமைச்சுக்கு தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பாரிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை முறையாக முன்னெடுப்பதற்கு அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு நேற்றையதினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"ஊடகத்துறை அமைச்சின் கீழ் முக்கியமான நிறுவனங்கள் பல உள்ளடங்குகின்றன. நிதி தொடர்பான பொறுப்பு, தபால் திணைக்களம், தகவல் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் அதில் உள்ளடங்குவதுடன் தேர்தல் வாக்களிப்பின் உத்தியோகபூர்வ முடிவுகளை அறிவிக்கும் பொறுப்பு தகவல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் துறை என அனைத்து ஊடக நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் இம்முறை தேர்தல் வழிகாட்டல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாக பின்பற்றுவது அவசியமாகும். அதேவேளை தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் அனைத்து அரசியல் கட்சி மற்றும் சுயாதீன வேட்பாளர்களுக்கும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகளில் சமமான காலம், இடம் வழங்கப்பட வேண்டும். நீதியும் நேர்மையுமான தேர்தலை நடத்துவது எமது பொறுப்பு என்பதால் பொறுப்பை உணர்ந்து அனைவரும் செயற்படுவது சிறந்தது.

அதற்கு அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே எமது கட்சியின் ஆதரவு முடிவுகளை தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளும் நிலைப்பாடு எமக்கில்லை

### ஈ.பி.டி.பி. ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!

**கரவெட்டி தினகரன் நிருபர்**

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தான் எமது கட்சியின் ஆதரவு வழங்கப்படும் என நாம் வெளிப்படையாக அறிவித்துள்ளோம். அதற்கிணங்கவே எமது கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் அமையும் என தெரிவித்துள்ள ஈழ மக்கள் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் முடிவுகளை தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளும் நிலைப்பாடு எமக்கில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (09.08.2024) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளதால் தங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

நாம் யாரதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அடிபணிந்து, சுயநலத்துக்காக ஆதரவு வழங்கியது கிடையாது. குறிப்பாக. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்துவமான செயற்பாட்டைக் கொண்ட கட்சியாகும்.

"மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்ற அரசியல் இலக்குடன் இணக்க அரசியலினூடாக டக்ளஸ் தேவானந்தா 30 ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நாடாளுமன்றில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அங்கம் வகித்துவருகின்றார்.

இதில் ஜனாதிபதிகளாக சந்திரிகா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என குறித்த ஜனாதிபதிகளின் கீழ் அமைந்த ஆட்சிக்காலங்களில் அமைச்சராகவே இருந்திருக்கின்றார். இவர்களுக்கான ஆதரவை அன்றைய சூழலுக்கேற்ற வகையில் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டே நாம் மேற்கொண்டிருந்தோம். இதேநேரம், தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினை அபிவிருத்தி அரசியலுரிமை ஆகியவற்றை நோக்காகக் கொண்டு ஈ.பி.டி.பி தனித்துவமான முடிவுகளை மக்கள் நலன்சார்ந்து தேர்ந்தெடுத்து தனது அரசியல் வழிகாட்டல்களை மக்களுக்கு வழங்கிவருகின்றது.

இத்தேர்தலில் தென்னிலங்கையைச் சேர்ந்த பல ஜனாதிபதி வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இதில் தாங்கள் குறிப்பிட்ட வேட்பாளரும் உள்ளடங்கும். ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை ஆதரிப்பதில் வெளிப்படையாகவே அறிவித்துள்ளது.எனவே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் நலன்சார்ந்து முடிவுகளை எடுக்குமே தவிர எவரது விருப்பு வெறுப்புகளுக்காகவும்' தன்னை மாற்றிக்கொண்டு செயற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் கந்தசுவாமி மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது



**யாழ். விசேட நிருபர்**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம், நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள மகோற்சவ திருவிழாக்கள் தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை மஞ்சத்திருவிழாவும், 25 ஆம் திகதி அருணகிரிநாதர் உற்சவமும், 26 ஆம் திகதி மாலை கார்த்திகை உற்சவமும், 27 ஆம் திகதி காலை சூர்யோற்சவமும், 28 ஆம் திகதி காலை சந்தானகோபலர் உற்சவமும், அன்றைய தினம் மாலை கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், 29 ஆம் திகதி காலை கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், அன்றைய தினம் மாலை வேல்விமானம் (தங்கரதம்), 30 ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி உற்சவமும், அன்றைய தினம் மாலை ஒருமுக உற்சவமும், 31 ஆம் திகதி மாலை சப்பற உற்சவமும், 01 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 02 ஆம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும், அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும், 03 ஆம் திகதி மாலை பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

## திருக்குறள் மாநாடும் கலைவிழாவும்

**கோப்பாய் குறூப் நிருபர்**

இணுவில் அறிவாலயத்தின் திருக்குறள் மாநாடும் கலைவிழாவும் இன்று (10) சனிக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

இணுவில் அறிவாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் காலை அமர்வு 8.30 மணிக்கும் மாலை அமர்வு பிற்பகல் 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

தொடக்க நிகழ்வாக திருவள்ளுவர் திருவுருவச் சிலை இணுவில் கோவில் வாசல் சந்தியிலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இணுவில் அறிவாலயம் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தொடக்கவுரையாற்றுவார். தொடர்ந்து சிறப்புரைகள், பட்டிமன்றம் என்பன நடைபெறும். மாலை அமர்வில் இசையரங்கு, நடன ஆற்றுகை என்பன இடம்பெறவுள்ளன.

## வவுனியாவில் இரு மோட்டர் சைக்கிள்கள் திருட்டு: மல்லாவி இளைஞன் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் இரு மோட்டர் சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மல்லாவி இளைஞனொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் (08.08) தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்றை காணவில்லை என அதன் உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகார் ஜெயக்கொடி அவர்களின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலைமையில் திசாநாயக்கா (37348), திலீபன் (61461), உபாலி (10945), தயாளன் (9792), ரணில் (81010) உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மல்லாவியைச் சேர்ந்த 27 வயது இளைஞன் ஒருவனை சந்தேகத்தில் கைது செய்திருந்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு அருகில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் மீட்கப்பட்டது.

## ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் பொலிஸாரால் விசாரணைக்கு அழைப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை மாங்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு விசாரணைக்கு வருமாறு மாங்குளம் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களின் வீட்டிற்கு 07.08.2024 அன்று இரவு ஊடகவியலாளர் வீட்டில் இல்லாத நிலையில் வீட்டுக்கு சென்ற பொலிஸார் அவருக்கான அழைப்பு கடிதத்தினை குடும்பத்தாரிடம் வழங்கிச் சென்றுள்ளனர்.

எந்தவித காரணங்களும் குறிப்பிடாது உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் விசாரணைக்காக வாக்குமூலம் பதிவுசெய்ய இருப்பதனால் 2024.08.09 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## இளம் தாயின் மரண விசாரணைகள் திசை திருப்பப்படுகிறது மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றச்சாட்டு

**மன்னார்குறூப்நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த வாரம் வைத்தியர்கள்,தாதிய உத்தியோகத்தர்கள் கவனயீனத்தால் மரணம் அடைந்த மன்னார்தம்பனைக் குளத்தை சேர்ந்த இளம் தாயின் மரணம் தொடர்பான விசாரணைகளை திசை திருப்பப் படுவதாகவும் குற்றம் இளைத்தவர்களை காப்பாற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் நேற்று (9) மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

மரணம் நிகழ்ந்து ஏறக்குறைய 11 நாட்கள் நிறைவுற்றுள்ளது. இந்நிலையில், மன்னார் வைத்திய சாலையின் விசாரணை அறிக்கையும், பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் அறிக்கையும், கள அறிக்கையும் ஒரு விடயத்தை செல்ல மாகாண சுகாதார அமைச்சின் விசாரணை இன்னொரு விதமாக காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக மாகாண சுகாதார அமைச்சின் அறிக்கையில் இந்த கொலையில் சம்மந்தப் பட்டவர்களை அல்லது சம்மந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்க கூடியவர்களை அதிகார மிக்கவர்களை காப்பாற்றுவதாக அமைந்துள்ளதாக நம்பதகுந்தவர்கள் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்கள், இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட ஒரு வைத்தியரையும் தண்டிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே விசாரணைகள் ஒரு குறுகிய அளவிலேயே முன்னெடுக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போது சம்பந்தப்பட்டவர்களை இடைநீக்கம் செய்யாது வெறுமனே இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் வைத்தியசாலை தரப்பாலும் மாகாண சுகாதார அமைச்சாலும் இடம்பெறுவதாகவும் சம்பந்தப்பட்ட 5 நபர்களுக்கும் இன்றைய தினம் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் அறியக்கூடியதாக உள்ளது. நீதியான விசாரணை செய்வதாக மக்களுக்கு கூறிவிட்டு சாதாரண இடமாற்றத்தையே செய்வதாகவும் நீதியான விசாரணை இடம் பெறவில்லை என்றும் எனவே நீதியான விசாரணை இடம் பெற வேண்டும் என்பதுடன் குற்றமிழைத்தவர்கள் வைத்திய துறையில் இருந்து நீக்கப்பட வேண்டும் என பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக கோரிக்கை விடுக்கப் பட்டது.

அதை விடுத்து சாதாரண இடமாற்றம் என்பதை பொது அமைப்புக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள போவதில்லை என்பதுடன் இவ்வாறு செய்தால் இவர்களுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள எங்களை வைத்திய தரப்பினர் நிர்பந்திக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். தொடர்ச்சியாக நாங்கள் வைத்தியசாலை மற்றும் சுகாதார துறையினரிடம் பேசி வருகிறோம். இந்த மரணம் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பிலும் பேசியிருக்கிறோம். நீதி வழங்குவதில் இருந்து நீங்கள் பின் வாங்கினால் வைத்திய சாலைக்கும், மாகாண சுகாதார அமைச்சுக்கும் எதிராக எங்கள் செயற்பாடுகள் இருக்கும் என்பதை தெளிவாக உரியவர்களிடம் தெரிவித்துள்ளோம். எனவே இந்த விடயத்தில் நாங்கள் தொடர்ந்து விழிப்போடும் நீதிக்காகவும் காத்திருப்பதாக பொது அமைப்புகளின் ஒன்றிய தலைவர் சிவகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொப்பேகடுவவின் 32 ஆவது நினைவு தினம்

**யாழ் . விசேட நிருபர்**





லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் 32 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் அராலித் துறையில் உள்ள கொப்பேகடுவவின் நினைவிடத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது டென்ஸில் கொப்பேகடுவ உள்ளிட்ட உயிரிழந்த முப்படையினருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி சந்தன விக்கிரமசிங்க உள்ளிட்ட முப்படை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். 1992 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அராலியில் இராணுவ வாகன தொடரணிக்கு மேற்கொண்ட குண்டு தாக்குதலில் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட பல இராணுவத்தினர் உயிரிழந்திருந்தனர்.

## மன்னார் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாபெரும் குருதிக்கொடை முகாம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு மன்னார் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் சங்கர் அவர்களின் நினைவாகவும் மன்னார் பொது வைத்தியசாலை இரத்த வங்கி முகாமையாளர் அமரசேகர அவர்களின் மேற்பார்வையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை (9) காலை 8 மணி தொடக்கம் 1 மணி வரை குறித்த மாபெரும் குருதிக்கொடை முகாம்' இடம்பெற்றது



மன்னார் ரோட்டரி கழகத்தில் தலைவர் திருமலைராசா தனேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைஞர்கள் யுவதிகள் மற்றும் தொடர்ச்சியாக குருதி வழங்கும் கொடையாளர்கள் என 40க்கும் மேற்பட்டவர்கள் குதியினை வழங்கியிருந்தார்கள். இதன்போது குருதிக் கொடையாளர்களுக்கு குருதிக் கொடை கான பதிவுப் புத்தகம், அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நினைவுச் சின்னம் போன்றவை வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்விற்கு மன்னார் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், மன்னார் அஞ்சல் அலுவலகம், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மன்னார் கிளையினர், முதியோர் நலன் சார்ந்து செயல்படும் டெவ்லிங் நிறுவனத்தினர், மன்னார் ரோட்டரி கழகத்தின் உறுப்பினர்கள் பங்களிப்புடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டவர்களிடம் பணத்தினை பெற்று யாழில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது

**யாழ் . விசேட நிருபர்**

வெளிநாட்டில் வசிப்பவர்களிடம் பணங்களைப் பெற்று யாழில் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த வன்முறை கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், வீடுகளுக்கு தீ வைப்புச் சம்பவங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மூன்று இளைஞர்களை நேற்றைய தினம் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 03 மோட்டார் சைக்கிள்கள், இரண்டு வாள்கள் மற்றும் நான்கு பெற்றோல் குண்டுகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.



யாழ்ப்பாணத்தில் இயங்கிய வன்முறை கும்பலுடன் சேர்ந்து இயங்கிய நபர் ஒருவர் தற்போது இலங்கையில் இருந்து தப்பிச் சென்று இந்தியாவில் வசித்து வரும் நிலையில், வெளிநாட்டில் உள்ள நபர்கள் இந்தியாவில் உள்ள நபருக்கு பெருந்தொகை பணத்தினை வழங்கி , யாழ்ப்பாணத்தில் தாக்குதல் சம்பவங்களை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய நபர்களையும் கைதுசெய்வதற்கு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்

## வவுனியா வடக்கு வலய சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சி

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா வடக்கு வலய சாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு 1 பயிற்சியானது இரு தினங்களாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் ஓமந்தை மத்திய கல்லூரியில் இப் பயிற்சியானது கடந்த 07, 08 ஆம் திகதிகளில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இப் பயிற்சியில் பயிற்சித் தலைவராக ப.அஜித்குமார் அவர்களும், உதவி பயிற்சி தலைவர்களாக ரா.வரதராஜா, யோ.கேதீசன் அவர்களும் பயிற்சிநெறியை வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில், வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர், உதவி மாவட்ட ஆணையாளர் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.



## சட்டவிரோத மணல் ஏற்றிச்சென்ற 5 டிப்பருடன் 5 சந்தேகநபர்கள் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் கடந்த வியாழக்கிழமை சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் ஐவரையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் மேற்படி வாகனங்களும் சந்தேக நபர்களும் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது



# கிழக்கின் குரல்



## நாட்டின் நலன்கருதி ரிசாட் பதியுதீன் எம்.பி ஜனாதிபதியுடன் இணைய வேண்டும்



சமூகத்தினதும், நாட்டினதும் நன்மை கருதி மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாட் பதியுதீன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நமது சமூகமும், நாடும் எதிர்பார்க்கும் நேசத்தின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

விரும்பியோ, விரும்பாமலோ முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சித் தலைவரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இவ்வாறான நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுத்து அவருடன் இணைந்து கொள்ள வேண்டும்.

இனவாதமில்லாத ஒரு தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எல்லோராலும் மதிக்கப்படுகின்றார். சமூகம் பாதிக்கப்பட்டு தனிப்பட்ட நபர்கள் நன்மையடையும் தீர்மானத்தை ரிசாட் பதியுதீனும் மக்கள் காங்கிரஸ் கட்சியும் எடுக்கக்கூடாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இருண்ட யுகத்தை மாற்றி நாட்டை பொருளாதாரரீதியில் வலுவான நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

அதுமட்டுமல்ல பிராந்தியங்களின் அபிவிருத்திக்காக எதிர்கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கோடிக்கணக்கான ரூபா பணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கீடு செய்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும். இவ்வாறு நாட்டை மீட்ட தலைவருக்கு ஆதரவளிக்க வேண்டியது நமது கடமையாகும். காலத்தை நாம் கடக்க முடியாது. காலம் நம்மைக் கடந்து விடும். அதனால் ரிசாட் பதியுதீன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தீர்மானத்தை விரைவாக எடுத்து அவருடன் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன, மத, மொழி, கட்சி வேறுபாடுகளை கடந்து ஒரே தேசமாக நாட்டை வெற்றிக் கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்ய எல்லோரும் களத்தில் இறங்கி பணியாற்றுவோம் என அவர் தெரிவித்தார்.

(எஸ்.எம். அறூஸ்)



வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நாக சதுர்த்தி விரத விசேட வழிபாடு (8) நேற்று முன்தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் வழிகாட்டலில் ஆலய குரு சிவ ஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் நாக சதுர்த்தி விரத விசேட வழிபாடு பூஜை நடைபெற்றது. (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## பொது வைத்திய நிபுணர் டொக்டர் ஏ.ஜே. சப்ரினாவுக்கு கௌரவம்

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

பொது வைத்திய நிபுணராக தெரிவு செய்யப்பட்டுள்ள அக்கரைப்பற்று அல் பாத்திமியா வித்தியாலயத்தின் பழைய மாணவி டொக்டர். ஏ.ஜே.சப்ரினாவை கௌரவிக்கும் நிகழ்வு அல் பாத்திமியாவின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் எம்.ஐ .எம். சமீம் தலைமையில் நடைபெற்றது.

பொது வைத்திய நிபுணர் பரீட்சையில் சித்திப் பெற்று இவர் இப்பதவிக்கு தகுதிப் பெற்றுள்ளார். இதன்போது பாடசாலை ஆசிரியைகளால் பொன்னாடை போர்த்தப் பட்டதோடு அதிபர் எம்.ஐ.எம். சமீம் மற்றும் பழைய மாணவர் சங்க உபதலைவர் எம். ஏ.ஐ. யூப்கான் ஆகியோரால் நினைவுப் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக

## அலுவலக கடமைகளுக்காக பீடாதிபதி யூ.எல். அப்துல் மஜீத் நியமனம்

(ஒலுவில் விசேட, அம்பாறை மத்திய தினகரன் நிருபர்கள்)



தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்பவியல் பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அலுவலக கடமைகளை ஆற்றுவதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக் கழக பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் பதவிக்காலம் வியாழக்கிழமை(08) ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில் அவ் வெற்றிடத்தின் காரணமாக உபவேந்தர் அலுவலக கடமைகளை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆறாவது உபவேந்தரை நியமிப்பதற்காக பல்கலைக்கழக பேரவையினால் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப் ஆகியோரது பெயர்கள் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக போட்டியிடுவதால் தேர்தல் சட்டங்களுக்கு அமைய, தேர்தலின் பின்னர் தெரிவு செய்யப்படும் புதிய ஜனாதிபதியினால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான புதிய உபவேந்தர் நியமிக்கப்படுவார்.

அதுவரைக்கும் உபவேந்தர் அலுவலக கடமைகளை ஆற்றுவதற்காக கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீதின் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பொத்துவில் பிரதான பஸ் டிப்போவுக்கு நிரந்தரக் கணக்காளர் நியமனம்

(ஒலுவில் விசேட நிருபர்)

தரம் உயர்த்தப்பட்டுள்ள பொத்துவில் பிரதான பஸ் டிப்போவுக்கு முதல் முறையாக நிரந்தரக் கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் பஸ் டிப்போவின் முகாமையாளர் ஏ.எம். முபாறக் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம். முஷாரப் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக முதற்கட்ட நிதியாக ரூ.60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான பஸ் டிப்போவாக கடந்த மார்ச் மாதம் தரமுயரத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பஸ் டிப்போவின் கீழ் இதுவரை காலமும் இயங்கி வந்த பொத்துவில் உப பஸ் டிப்போ பஸ் டிப்போவாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதையடுத்து. கடந்த செவ்வாய் கிழமை (06) முதல் செயற்படும் வண்ணம் புதிதாக கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பஸ் டிப்போ தரமுயர்த்தப்பட்டதனால் தூரப் பிரதேசங்களுக்கான நவீன பஸ் சேவைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும். இதனால் பொத்துவில் பாணாம, லகுகல, கோமாரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவார்களெனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் உத்தியோகபூர்வமாக பொத்துவில் டிப்போவுக்கு சொந்தமான காணியானது வழங்கப்படாமல் இருந்த நிலையில், காணிகள் உரிய நிலபுல எல்லைகளோடு பொத்துவில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## போரதீவுபற்று பிரதேசத்தை உள்ளடக்கியவாறு தனியான கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட வேண்டும்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



போரதீவுபற்று பிரதேசத்தை உள்ளடக்கிய வகையில் படுவான்கரை பகுதிக்கு மேலும் ஒரு தனியான கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் திக்கோடை கணேசா வித்தியாலயத்திற்கான ஒலிபெருக்கி சாதனம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போரதீவுபற்று பிரதேசத்தை உள்ளடக்கிய வகையில் படுவான்கரை பிரதேசத்தில் மேலும் ஒரு தனியான கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது மிக நீண்டகால கோரிக்கையாகும்.

யுத்த அனர்த்தம், இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கல்வித் துறையை வலுப்படுத்தும் போது வலுவான கட்டமைப்பாக தமிழர்களின் இருப்பை நிலைப்படுத்திக் கொண்டு பயணிக்க முடியும்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராகவிருந்த காலக்கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு தமிழ் கல்வி வலயங்களில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயமும் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் கல்வி வலயமும் அமைகின்றது. அதனூடாக இரண்டு கல்வி வலயங்களுக்குட்பட்ட வறுமை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலைமைகள் மேம்படுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் கல்வி வலயத்தில் அண்மையில் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழக தேர்வுகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ. 1.1 மில்லியன் செலவில் திறன்வகுப்பறை

(மணல்சேனை நிருபர்)



நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் முகமாக ரூ.1.1 மில்லியன் செலவில் திறன் வகுப்பறை (Smart classroom) கமு/சது/ வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் கே.தியாகராஜாவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இதன் திறப்பு விழா நடைபெற்றது.

திறன் வகுப்பறைக்கான நிதியுதவி அமரர். கலாநிதி. சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோனா சுதர்ஷன், நீலன் சுதர்சன்(USA) மனித நேயம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு. அம்பாறை அமைப்பின் நெறிப்படுத்தலில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மனிதநேய அமைப்பின் சார்பாக சு. சிரஞ்ஜீவி மற்றும் திருமதி சிரஞ்ஜீவி, உதவிக்கல்விப் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான ம.சந்திரகுமார், சா.மோகன், விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் தலைவர் தி.கோபிநாத் இணைப்பாளர் பொறியியலாளர் வ.யதுர்ஷன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் கு.மதிவண்ணன், பழைய மாணவர் சங்க செயலாளர் சனோஜன், பாடசாலை உப அதிபர் மா.தர்மலிங்கம், ஆசிரியர்கள், விஞ்ஞான ஒன்றிய அமைப்பின் உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மனித நேயம் அமைப்பின் இச்சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தினால் சிரஞ்ஜீவி தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விஞ்ஞான ஒன்றியம் மட்டு.அம்பாறை அமைப்பினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நூலகங்களை மேம்படுத்த நடவடிக்கை

(கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை ஆராயும் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை (08) மாநகர சபை கூட்ட மண்டபத்தில் ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களில் நிலவி வருகின்ற குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்களிடம் கேட்டறிந்து கொண்ட ஆணையாளர், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.



இந்நிலையில் நூலகங்களின் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கும் தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், களஞ்சியக் காப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன் போதிய வசதிகள், ஆளணிகள் இருந்தும் சில நூலகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக வாசகர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் உதாசீனம் செய்யாமல், முறையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஆணையாளர், தவறிழைக்கும் பணியாளர்கள் மீது எவ்வித தயவுமின்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன், விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். நஸ்ரின் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை அல்மிஸ்பாஹ் மகா வித்தியாலய

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்



கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பாடசாலை கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத் தலைவராக பாடசாலை அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக், உப தலைவராக எஸ்.எம். சப்ராஸ், செயலாளராக எம்.எச்.ஐ. இஸ்ஸத் (உதவி அதிபர் கல்முனை அல் பஹ்ரியா ம.வி) பொருளாளராக. ஏ.எம். ரியால் (விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கல்முனை அல் பஹ்ரியா ம.வி), ஆலோசகராக எம்.ஐ.எம். அப்துல் மனாப் (பொதுச் செயலாளர் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகம்) உட்பட மேலும் செயற்குழு உறுப்பினர்களாக ஒவ்வொரு வருட மாணவர் குழு சார்பானவர்கள் இதன்போது தெரிவு செய்யப்பட்டனர்.

(எம்.எம்.ஜெஸ்மின்)

## ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

குறைவான வளங்களைக் கொண்டு திறமையாக பணி செய்துவரும் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மின்பிறப்பாக்கி (Generator) மற்றும் ஒருதொகுதி தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி ஏ.அகிலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்தியத்திலுள்ள சுகாதார பிரிவுகளில் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது. சுகாதார வைத்திய அதிகாரியினதும், அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களினதும் கடின உழைப்பே அதற்குப் பிரதான காரணமாகும். அந்த வகையில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி.அகிலன் உள்ளிட்ட அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களை பாராட்டுகின்றேன்.

இந்த அலுவலகத்தில் 5S முறைமையை நடைமுறைப்படுத்தி இதன் சேவைத்தரத்தை மேலும் கூட்ட வேண்டும். கடந்த காலங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சுக வனிதையர்களுக்கான சேவை வழங்குதலில் (well women programme) சிறப்பு விருதுகளையும் பெற்றுக்கொண்டது. அதனை தக்க வைத்துக் கொள்வது இங்குள்ளவர்களின் பொறுப்பாகும். உங்களுடைய தேவைகள் குறைபாடுகளை தெரியப்படுத்துமிடத்து அவற்றை முடியுமான அளவு நிவர்த்தி செய்வோம் என்றார்.



## நகர்வலம்



இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிங்கள திரைப்படமான, தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட "இனி ஒரு விதி செய்வோம்" எனும் படத்தின் ஆரம்ப வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (08) மாலை (One Galle Face) PVR சினிமா அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டது. இதன்போது, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் குத்து விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம்.

# ரணிலே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் இளம் தொழிற்றுறையினர் சங்கம் வலியுறுத்து

**(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)**

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையே மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு இளம் தொழிற்றுறையினர் முன்வர வேண்டும் என இளம் தொழிற்றுறையினர் சங்கம் கேட்டுள்ளது.



கொழும்பு, கொம்பனித்தெருவில், நிப்பன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றிலேயே இளம் தொழிற்றுறையினர் சங்கம் இதனை வலியுறுத்தியுள்ளது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் சுசில் கருலென்த, செயலாளர் ரணில் வில்லத்தரகெ, தேசிய அமைப்பாளர் கோசல முனசிங்க, பொருளாளர் ஏசான் சமரதுங்க மற்றும் கொழும்பு மத்திய கொழும்பு அமைப்பாளர் மொஹமட் சியாட் முஸ்னி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது, கருத்து தெரிவித்த இவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு இளம் தொழிற்றுறையினர் முன்வர வேண்டும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இளம் சாதனை நீச்சல் வீரரான ஸலாமாவின் வருகைக்கு பேருவளையில் வரவேற்பு ஏற்பாடுகள் மும்முரம்

**(பேருவளை : பீ.எம் முக்தார் )**

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த 15 வயது சிறுவன் ஹஸன் ஸலாமா, இன்று 10 ஆம் திகதி சனிக்கிழமை பேருவளை நகருக்கு வருகை தரவுள்ளார்.

நாட்டை சுற்றிவரும் சாதனை நடைப்பவனியில் ஈடுபட்டுள்ள சஹ்மி சஹீத்தை, கடந்த 03 ஆம் திகதி சந்தித்த ஹஸன் ஸலாமா, தனது நீச்சல் அனுபவம் பற்றிய விடயங்களையும் பகிர்ந்துக்கொண்டுள்ளார். அத்துடன் சஹ்மிவுடனான சந்திப்பை சமூக ஊடகங்களிலும் பகிர்ந்துள்ளார்.

இந்நிலையில், ஹஸன் ஸலாமாவின் பேருவளை வருகையை முன்னிட்டு, பேருவளை மஸ்ஸல வீதியில் அமைந்துள்ள சிமி ஹோல்டிங் காட்சியகத்திற்கு அருகில், அதன் உரிமையாளர் அல்ஹாஜ் இஜ்லாம் யூசுஃப் தலைமையிலான வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.





புத்தளம் வலய தமிழ்மொழி பாடசாலைகளுக்கிடையில் கடந்த 03 ஆம் திகதி நடைபெற்ற, தமிழ் மொழி தினப் போட்டியில், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை மாணவர்கள், பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து பாடசாலைக்கும் தமது சமூகத்துக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். அதன்படி, நாட்டார் பாடலில் முதலாம் இடத்தையும், குழு நடனத்தில் முதலாம் இடத்தையும், பெற்றுக் கொண்டுள்ளனர்.

(படம் : உடப்பு குறூப் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தில்

# 105 உர மூடைகளில் 3,524 கிலோ பீடி இலைகள் மீட்பு



புத்தளம் மாவட்டத்தின், கற்பிட்டி உச்சமுனை மற்றும் கண்டல்குழி ஆகிய பகுதிகளில், கடற்படையினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, 105 உர மூடைகளில் 3,524 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் நேற்று முன்தினம் (08) மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின்போதே, இவ்வாறு பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கற்பிட்டி கண்டல் குழி கடற்பிரதேசத்தில், 19 உர மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 642 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கற்பிட்டி உச்சிமுனை கடற்பிரதேசத்தில், பெரும் எண்ணிக்கையிலான உர மூடைகள் கடலில் மிதந்துகொண்டிருந்தபோது, அதனை அவதானித்த கடற்படையினர், சோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது, 86 உர மூடைகளிலிருந்து 2,882 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் அடங்கிய 105 உரமூடைகளும், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, வடமேல் மாகாண கலால் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புத்தளம் எரம்பு கொட களப்பு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றிலிருந்து நேற்று முன்தினம் (08) வியாழக்கிழமை 689 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பெயரில் ஒருவரை கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா நாளை



இனிய நந்தவன வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா, நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு, முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் கம்பீரக் குரலோன் சி.நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் ஹாஷிம் உமர் பௌண்டேஷன் நிறுவுனருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வவுனியா தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது ஏற்புரையை இளையகவி திரியாயூரன், அறிமுகவுரையை யோ. புரட்சி, வாழ்த்துரையை ரயூலா திருச் செல்வன், நயப்புரையை எழுத்தாளர் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா, ஏற்புரையை கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் நிகழ்த்துவர். இனிய நந்தவனம் சஞ்சிகையின் யாழ்ப்பாணம் ஆலோசகர் யாழ்ப்பாவாணன் நன்றியுரையாற்றுவார்.



நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் நாக சதுர்த்தி விரத விசேட பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் (8) வெகு சிறப்பாக நடைபெற்றபோது, பெருந்திரளான மக்கள் கலந்துக்கொண்டிருந்தமையை படத்தில் காணலாம். (காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

# 35 ஆவது பொதுக்கூட்டம்

மாகோல முஸ்லிம் அநாதை நிலையத்தின் பழைய மாணவர் சங்கத்தின் 35 ஆவது பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11.08.2024) இடம்பெறவுள்ளது.

இக்கூட்டம், காலை 10.00 மணிக்கு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு, அல்ஹிதாயா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது, பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் எஸ். எம். அஸ்வர் தலைமையில் 2025/2026ம் ஆண்டுகளுக்கான நிர்வாக மற்றும் செயற்குழு தெரிவுகள் இடம் பெறவுள்ளது.

இந்நிலையில், குறித்த பாடசாலையின் பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் முனவ்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

MAKOLA MUSLIM ORPHANAGE OLD BOYS ASSOCIATION

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில்

# இந்திய பயிற்சி ஆசிரியர்களின் 10 வாரகால பயிற்சிகள் ஆரம்பம்

## 40 நிலையங்களில் நடத்த தீர்மானம்

இலங்கை வந்துள்ள இந்திய பயிற்சி ஆசிரியர்கள், மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் 40 நிலையங்களில் நேரடி பயிற்சி அமர்வுகளிலும் மேற்கு, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களை சேர்ந்த மையங்களில் மெய்நிகர் ஊடாகவும் பத்து வார கால ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இந்திய பயிற்சி ஆசிரியர்களின் பயிற்சித்திட்டம் தொடர்பில், கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தினது இலங்கை வருகையின் 200 ஆண்டுகளை பிரதானமாகக் கொண்டு, 750 மில்லியன் ரூபா பல்துறை இந்திய நன்கொடை உதவியின் கீழ், பெருந்தோட்ட பிராந்தியங்களிலுள்ள பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



2023 ஜூலை மாதம் நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

இதன்படி இயற்பியல், வேதியல், கணிதம், ஆங்கிலம் மற்றும் உயிரியல் ஆகிய பாடத்துறை ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் தற்போது இலங்கையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 05ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே, கல்வி அமைச்சு, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள், இந்தியாவின் ஆசிரிய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இலங்கையின் பெருந்தோட்ட பிராந்தியங்களில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 'உலகிற்கு ஒரு மரம்' கண்டியில் பாரதப் பிரதமரின் திட்டம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின், 'உலகிற்கு ஒரு மரம்' என்ற திட்டம் கண்டியிலும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவினால், 'என்னால் கண்டிக்கு ஒரு மரம்' என்ற வேலைத்திட்டத்தினூடாக, கண்டி வாவிக்கரையில் மரமொன்றை நாட்டுவதை படத்தில் காணலாம்.

**(அக்குறணை குறூப் நிருபர்)**

## மலைச்சாரல்

## கட்டுப்பணத்தை செலுத்தியது மக்கள் போராட்ட கூட்டமைப்பு



**(அக்குறணை குறூப் நிருபர்)**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முகமாக, மக்கள் போராட்ட கூட்டமைப்பு (ஜன அரகல சந்தானய) கட்சியும் தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

அதன்படி, இக் கட்சியின் வேட்பாளரான சட்டத்தரணி நுவன் போக்கபகே கட்டுப்பணத்தை செலுத்தியுள்ள நிலையில், தனது தேர்தல் பிரசாரத்தை கேகாலை சனச மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) ஆரம்பித்திருந்தார். இந்த பிரசாரக் கூட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பொதுமக்களே கலந்து கொண்டனர்.

மக்கள் போராட்ட கூட்டமைப்பு கட்சி, நாட்டில் கடந்த காலங்களில் கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் விளைவாக உருவான கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

# நூற்றுக்கணக்கான ஏக்கர் அரச வனம் காட்டுத் தீயினால் நாசம்

**(ஊவா சுழற்சி நிருபர்)**

மொனராகலை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் அரச வனம் காட்டுத் தீயினால் நாசமாகியுள்ளதாக மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரவீந்திர குமார தெரிவித்துள்ளார்.

இவ் வருடத்தின் கடந்த மாதங்களில் மொனராகலை மாவட்டத்தில் இருபதுக்கும் மேற்பட்ட காட்டுத் தீ வைப்பு சம்பவங்கள் பதவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



வெள்ளவாய, புத்தல, பிபில, மடுல்ல மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே அதிகளவிலான காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதில் பெருமளவிலான வனவிலங்குகளும் அழிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீ விபத்துகள் அனைத்தும் இனந்தெரியாத வேட்டையாடுபவர்கள் மற்றும் இதர மனித நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்ட கிராம உத்தியோகத்தரால் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரவீந்திர குமார மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹப்புத்தளையில் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான அம்பாறை லொறி

அம்பாறையிலிருந்து அரிசியை ஏற்றிச்சென்ற கனரக லொறியொன்று, வெலிமடை, தங்கமலை பகுதியில், வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று நேற்று முன்தினம் (08) இடம்பெற்றதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறையிலிருந்து பயணித்த இந்த லொறி, ஹப்புத்தளையில் அரிசியை இறக்கி விட்டு, ஹட்டன் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



இவ் விபத்தில் லொறியின் சாரதியும், நடத்துனரும் படுகாயமடைந்துள்ள நிலையில், ஹப்புத்தளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் கற்கும் மருத்துவ மாணவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

## இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல



வெளிநாடுகளில் கல்வி கற்கும் மருத்துவ மாணவர்களுக்கு இலங்கையில் சேவை செய்வதற்கு காணப்பட்ட சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவதாக சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

அந்த வகையில் வெளிநாடுகளில் கல்வி கற்று மீண்டும் நாடு திரும்பும் மருத்துவ மாணவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சுகாதாரத்துறையில் நிலவும் மனிதவள அபிவிருத்தி தொடர்பில் திருத்தங்களையும் முன்வைத்தே இரண்டு சட்டமூலங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகாதாரத் துறை திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"மனித வளங்கள் மேம்பாடு தொடர்பான இரண்டு சட்டமூலங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரு வருட காலமாக விரிவான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சர்வதேச நாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு நாடு திரும்புபவர்களுக்கு சேவைக்கு அழைப்பு விடுக்கும் வகையில் இந்த சட்டமூலத்தின் உள்ளடக்கம் காணப்படுகிறது. அது தொடர்பில் நிலவிய சிக்கல்களுக்கு தீர்வாக இந்த சட்டமூலம் அமையும்.

நாட்டை விட்டு சென்றுள்ள பெரும்பாலான குடும்பங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளில் பட்டப்படிப்பை மேற்கொண்டு மீண்டும் நாட்டுக்கு திரும்பி சேவை செய்வதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

நாட்டில் நிலவும் விசேட மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். கொழும்பு மருத்துவபீடம் உலகில் சிறந்த மருத்துவ பீடங்களில் ஆயிரமாவது இடத்தில் உள்ளது. அது மகிழ்ச்சி தரும் விடயமாகும். அத்துடன் பட்டப் பின்படிப்பு தொடர்பில் நிலவிய சிக்கல்களுக்கும் மேற்படி சட்டமூலத்தின் ஊடாக பதில் கிடைக்கும்" என்று தெரிவித்தார்.

# சர்வதேச கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை விரைவில் நிறைவு செய்ய முடியும்

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க



சர்வதேச கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதி மற்றும் நீதி ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், விரைவில் அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச கடன்களை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளின் காலப்பகுதியை நாம் உறுதியாக குறிப்பிடவில்லை. எனினும் வெகு விரைவில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

"பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு என்பது இலகுவான விடயம் அல்ல. அதற்காக விரிவான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வழிமுறைகளில் சர்வதேச ரீதியில் கடன்களை பெற்றுக் கொண்டுள்ளது.

தேசிய கடன்கள் சிறந்த முறையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்கும் போது நிதி தொடர்பான ஆலோசனைகள் பிரான்ஸ் நாட்டின் லஸாட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு இரு தரப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பான விடயங்களை முழுமையாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார்.

கடந்த காலங்களிலும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் விபரங்களை முழுமையாக அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளது. நீதி தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு கிளிபர்ட்சான்ஸ் நிறுவனத்திடம் இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்புக்கு பின்னர் இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நிறைவு பெறும் திகதியை மத்திய வங்கியோ அல்லது அரசாங்கமோ உறுதியாக குறிப்பிடவில்லை. மறுசீரமைப்பு நடவடிக்கைகளை வெகு விரைவில் நிறைவு செய்து, பொருளாதார முன்னேற்றத்திற்கான அடுத்த கட்டப் பணிகளை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்" என்று தெரிவித்தார்.

# நிகழ்நிலை காப்பு சட்டத்தின் திருத்த சட்டமூலம் சமர்ப்பிப்பு



நிகழ்நிலை காப்பு சட்டத்தின் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் சார்பில் சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்படி சட்டமூலத்தை நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கிணங்க சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை காப்பு சட்டம் தற்போது வலுவுடையதாக உள்ளது.

குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் துறைசார் நிபுணர்கள் சட்டமூலத்தின் ஒரு சில பிரிவுகள் பற்றிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டிருப்பினும், குழுநிலை விவாதத்தின் போது அவ்வாறான திருத்தங்களை சட்டமூலத்தில் உள்ளீர்த்துக்கொள்வதற்கு இயலுமை கிட்டவில்லை.

அதற்கமைய குறித்த திருத்தங்களை உள்ளடக்கி 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை காப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக 2024.02.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதையடுத்து அதனை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு கடந்த ஜுலை 22ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்கிணங்கவே நேற்றையதினம் குறித்த திருத்த சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




லோரன்ஸ் செல்வநாயகம்

# சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு

## அமைச்சர் ரமேஷ் பத்திரன

சுகாதாரத் துறையில் நிலவிய பெரும்பாலான சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தேவையான அனைத்து மருந்துகளும் தற்போது கைவசம் உள்ளதாகவும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

உயிர் பாதுகாப்பு மருந்துகள் அனைத்தும் சுகாதாரத் துறையில் உள்ள நிலையில் 52 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்டாலும், அதற்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய மருந்துகள் நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மருத்துவ திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,



"வெளிநாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு நாடு திரும்புவோருக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேவேளை நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு சென்ற மருத்துவர்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதற்கு தீர்மானம் எடுத்துள்ளமையையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

சுகாதாரத் துறையில் விசேட மருத்துவர்களின் தட்டுப்பாடு காணப்படுகிறது. அந்த வகையில் வெளிநாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தரும் போது அதனை இங்கு ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவ்வாறானவர்கள் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். அந்த வகையில் உலகில் முன்னணியிலுள்ள ஆயிரம் மருத்துவ பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றவர்கள் நாட்டிற்கு வந்து சேவை செய்ய முடியும்.

நாட்டில் சிறந்த சுகாதாரத் துறையை கொண்ட நாடுகள் ஆசியாவில் உள்ளன. அதில் எமது நாடு 47ஆவது இடத்தில் காணப்படுகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

1948ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் எத்தகைய பிரச்சினைகள் இருந்த போதும், சுகாதார சேவையின் அபிவிருத்திக்கு அனைத்து அரசாங்கங்களும் நடவடிக்கை எடுத்துள்ளன. அந்த வகையில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்படும் நிதியும் அதிகரித்து வருகின்றது. எமது நாட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சுகாதாரத் துறையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். தற்போது நாட்டில் 52 மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவினாலும் அதற்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய மருந்துகள் அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ளன. கடந்த காலங்களில் சுகாதாரத் துறையில் நிலவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் டெங்கு மரணங்கள் வெகுவாக குறைந்துள்ளன. டெங்கு நோய் தாக்கமும் வெகுவாக குறைந்துள்ளது.

அந்த வகையில் நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக கடந்த வாரம் 9 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தாய், சேய் மரணம் தொடர்பான தேசிய அலுவலகம் ஒன்றை நாட்டில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நோயாளர்களின் பாதுகாப்புக்காக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். நோய் கட்டுப்பாட்டு மத்திய நிலையமும் உருவாக்கப்படவுள்ளது" என்று தெரிவித்தார்.

## எம்மோடு இருந்துவிட்டு

# எதிர்க்கட்சி தலைவருடன் இணைந்தோர் தொடர்பாக பிரச்சினை கிடையாது

## பிரேம்நாத் சி.தொலவத்த எம்.பி.

"எம்மோடு இருந்துவிட்டு எதிரணியில் அமர்ந்து எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து கொண்டவர்கள் தொடர்பில் எமக்கு பெரும் பிரச்சினை எதுவும் கிடையாது" என ஆளும் கட்சி எம்.பி. பிரேம்நாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

அதிசயம் என்னவென்றால் எமது தரப்பில் இருந்த போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அங்கு சென்றதும் தூய்மையானவர்களாக மாறி அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சின் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பல தரப்பினர் இணைவதாக நான் கேள்விப்பட்டேன். டலஸ் அழகப்பெரும எம்.பி. போன்றவர்கள் அவருடன் இணைவது தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது வீட்டிலிருந்து வெளியே சென்று மீண்டும் வீட்டுக்கு திரும்புவது போன்றதானது.



இன்னும் சில தினங்களில் முஜிபுர் ரஹ்மானும் மரிக்காரும் கூட சஜித்துடன் இணைந்து விட்டார்கள் என்றும் கூட சிலர் தெரிவிக்கலாம். இது ஆச்சரியப்படுவதற்கில்லை.

சிலர் எம்மோடு இருந்துவிட்டு எதிர்க்கட்சியில் போய் அமர்ந்தவர்கள் இன்று சஜித் பிரேமதாசவோடு இணைந்து கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு அவர்கள் செல்லும் போது பொதுவாக எம் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் இல்லாமல் போய் விட்டன. எத்தகைய குற்றச்செயலில் ஈடுபடுபவரும் மறுபக்கம் சென்று விட்டால் அவர்கள் உடனடியாகவே தூய்மையாகி விடுவார்கள். அங்கு சிறந்த சலவை மெஷின் உள்ளது. அது மட்டுமன்றி அவர்களுக்கு அமைச்சர் பதவிகளும் கிடைக்கும்.

எமது பொருளாதார ஆலோசகராக இருந்த நாலக்க கொடஹேவா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதால் அந்த அரசாங்கத்தில் அவர் பொருளாதாரம் தொடர்பான அமைச்சராகி விடுவார். அவ்வாறு செல்லும் ஜீ.எல் பீரிஸுக்கு நீதியமைச்சர் பதவி, சந்திம வீரக்கொடிக்கு பெற்றோலிய அமைச்சர் பதவி அவ்வாறு ஏற்கெனவே குற்றம் சுமத்தப்பட்ட அவர்கள் அங்கு போனதும் தூய்மையாகி விடுவார்கள். அவ்வாறான குழுக்கள் எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்ததில் எமக்கு பெரும் பிரச்சினை எதுவும் கிடையாது. பாசிச வாதத்துடன் செயற்படும் ஒரு தரப்பினர் இந்த பாராளுமன்றமே அவசியமற்றது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டே செயற்படுகின்றார்கள்.

அதனால்தான் ஒரு சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தின் அதிகாரத்தை கிராமங்களுக்கு வழங்க வேண்டும் என லால் காந்த கேட்கின்றார். எமக்கு தற்போது தெளிவாக விளங்குகின்றது பங்களாதேஷில் அவ்வாறு அதிகாரத்தை கிராமங்களுக்கு வழங்கியதால் என்ன நடந்தது என்று. அதனால் இந்த சிக்கலான நிலைமையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். பங்களாதேஷில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் மற்றும் சட்டத்தை கையிலெடுத்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், அழிவுகள் தொடர்பில் நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

# இரண்டு மருத்துவ திருத்த சட்டமூலங்கள் நிறைவேற்றம்



மருத்துவ திருத்த சட்டமூலங்கள் இரண்டு நேற்று முன்தினம் (08) பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணி முதல் இந்த சட்டமூலங்கள் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெற்றதுடன், இதன்போது இந்த சட்டமூலங்களின் முக்கியத்துவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கருத்துகளை முன்வைத்தனர்.

விவாதம் முடிவடைந்ததும் குழு நிலையில் இந்த சட்டமூலங்களுக்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இரு சட்டமூலங்களும் விவாதம் இன்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மருத்துவ கட்டளை சட்டத்தை திருத்துவதற்கான இரு மருத்துவ திருத்த சட்டமூலங்களும் சுகாதார அமைச்சரினால் கடந்த ஜூலை 02ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

# பாராளுமன்றத்துக்கு ஐக்கிய அமெரிக்க பிரதிநிதிகள் வருகை







இலங்கை பாராளுமன்றத்துக்கு ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் உறுப்பினர்களான ஜமேக்காவின் முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி பீட்டர் பிலிப்ஸ், கென்யாவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எந்திரிது முரிய்தி மற்றும் காங்கிரஸ் வரவு, செலவு திட்ட அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் கிறிஸ்டி ஹவ்லி அந்தனி ஆகியோர் அண்மையில் விஜயம் செய்துள்ளனர்.

இதன்போது அவர்கள், பாராளுமன்ற பணியாட்தொகுதியின் தலைவரும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன மற்றும் பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோருடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், பொதுக் கடன் முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை பாராளுமன்றத்தின் பணியாளர்களுக்கு தூதுக் குழுவின் வளப் பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்ட மூன்று நாள் செயலமர்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் பாராளுமன்ற முறைமை மற்றும் சட்டவாக்க முறை, பாராளுமன்ற குழு முறைமை, பெண்களின் பிரதிநிதித்துவம், பாராளுமன்றத்தின் பொது மக்கள் வெளிக்கள செயற்பாடுகள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

# றோயல் கல்லூரியின் Capital Market Club இற்கு அமானா வங்கி ஆதரவு



பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிதிசார் அறிவை வழங்கி, தகவலார்ந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக கட்டியெழுப்பும் வகையில் றோயல் கல்லூரியின் *Capital Market Club* உடன் அமானா வங்கி அண்மையில் கைகோர்த்திருந்தது. அதன் பிரகாரம், கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது *'Market Mastery'* பயிற்சிப்பட்டறைக்கு அனுசரணை வழங்கியிருந்தது. ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் இணைந்த முயற்சியாக *Capital Market Club* அமைந்திருப்பதுடன், மாணவர்களுக்கு அத்தியாவசியமான நிதிசார் அறிவைப் பெற்றுக் கொடுக்க இவை கைகோர்த்துள்ளன.

*Capital Market Club* இன் அறிமுக நிகழ்வான *Market Mastery* அண்மையில் றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மேல் மாகாணத்தின் 18 பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சிப் பட்டறையின் போது முன்னணி மூலதன சந்தையின் நிபுணர்கள் பெறுமதி வாய்ந்த அறிவையும், முக்கியமான தகவல்களையும் பகிர்ந்து கொண்டதுடன், மாணவர்களுக்கு பங்குப் பரிவர்த்தனை, முதலீட்டு மூலோபாயங்கள், நிதிப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு செயன்முறைகள் போன்றன தொடர்பான அறிமுகங்களையும் வழங்கியிருந்தனர். மேலும், பயிற்சிப் பட்டறைக்கு பங்களிப்பு வழங்கும் வகையில், அமானா வங்கியின் அறிவு சந்தைப்படுத்தல் மற்றும் நிதிசார் உள்ளடக்கத்துக்கான தலைமை அதிகாரி முவாத் முபாறக், முதலீடுகள் மற்றும் தனிப்பட்ட நிதி முகாமைத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பான விசேட விரிவுரையையும் வழங்கியிருந்தார். மேலும், மாணவர்களுக்கு வட்டிசாராத வங்கியியல் மாதிரி தொடர்பான அறிமுகத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

# பெண் தொழில் முயற்சியாண்மையின் மகத்துவத்தை கொண்டாடிய DFCC



பெண்களை மையமாகக் கொண்ட மொத்த வங்கிச்சேவை முன்மொழிவான DFCC ஆலோக, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண் தொழில்முயற்சியாண்மையைக் கௌரவித்து, ஆதரிக்கும் பிரத்தியேக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது. "DFCC ஆலோகவின் பெண் தொழில்முயற்சியாண்மையின் மகத்துவத்தின் கொண்டாட்டம்" (*DFCC Aloka Celebrates Women Entrepreneurial Excellence*) என்ற தொனிப்பொருளில், DFCC வங்கியின் தலைமை அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. பல முன்னணி பெண் தொழில்முயற்சியாளர்கள், DFCC பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், DFCC வங்கியின் பணியாளர்கள், மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் (*Women's Chamber of Industry and Commerce WCIC*) தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களாகவுள்ள DFCC வாடிக்கையாளர்கள் என மதிப்பிற்குரிய விருந்தினர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விருந்தினர்கள் மத்தியில், WCIC இன் தலைவர் அனோஜி டி சில்வா, சாதனைப் பெண் தொழில்முயற்சியாளர்களான ஒட்டாரா குணவர்த்தன, தானியா பொலொன்னொவிட்ட மற்றும் நயனா கருணாரட்ன, DFCC வங்கியின் தலைவர் ஜெகன் துரைரட்ணம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். இலங்கையில் பெண்களின் தலைமையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், அதன் தூர நோக்கு குறித்தும் தனது செய்தியை வழங்கிய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் DFCC ஆலோக திட்டத்தின் வகிபாகம் குறித்து சுட்டிக்காட்டியதுடன், இலங்கையில் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களுடைய சமூகங்கள் மத்தியில் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கு உதவுவதற்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகின்ற பல நிகழ்ச்சித்திட்டங்களில் இதுவும் ஒன்று என்பதைக் குறிப்பிட்டார்.

# முக்கிய உட்கட்டமைப்பை மாற்ற Huawei உடன் இணைந்த LB Finance



இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் வங்கியல்லாத முதன்மையான நிதியியல் அதிகாரத்தைக் கொண்டுள்ள LB Finance PLC நிறுவனம், அதன் முக்கிய வங்கிக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக Huawei உடனான கூட்டணியை அறிவித்துள்ளது. Huawei நிறுவனத்தின் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, டிஜிட்டல் பணப்பை, டிஜிட்டல் வங்கி, கடன்கள், குத்தகை, சேமிப்பு மற்றும் வைப்பிடல், நுண்கடன்கள், கட்டண அட்டைகள் உள்ளிட்ட LB Finance இன் விரிவான சேவைகளின் தொகுப்பை மேம்படுத்தும் வகையில் இந்த மூலோபாய ஒத்துழைப்பு அமைந்துள்ளது.

இந்த திட்டத்தை ஆரம்பிக்கும் வகையில், LB Finance ஆனது Huawei இன் OceanStor Dorado 5000 AllFlash சேமிப்பக தொகுதிகளை ஒருங்கிணைத்துள்ளது. அதிவேக பரிவர்த்தனைகள், பாரிய அளவிலான தரவு செயலாக்கம் மற்றும் நிகழ்நேர கண்காணிப்பு ஆகியவற்றைக் கையாள இந்த அதிநவீன, cloudready தயார்நிலை தொகுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், முக்கியமான தரவு செயற்பாடுகளின் ஒருங்கிணைவு மற்றும் செயல்திறன் உறுதி செய்யப்படுகின்றன.

இதன் ஒரு முக்கிய படியாக, *Huawei OceanStor Dorado* தொகுதியானது, 2023 நவம்பரில் LB Finance நிறுவனம் ஏற்கனவே கொண்டிருந்த சேமிப்பக உட்கட்டமைப்பை மூன்று வாரங்களுக்குள் மாற்றியமைகப்பட்டது. உச்ச பயன்பாட்டுத் தேவை கொண்ட காலப் பகுதியில் தங்கு தடையின்றி இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த தொகுதியானது செயற்பாட்டை ஆரம்பித்தது முதல், *virtual servers, databases, application servers, development environments, and AI/BI tools* போன்ற தனது தயாரிப்பு சேவைகள் மற்றும் தரவுகளை புதிய தளத்திற்கு LB Finance இடம் மாற்றியுள்ளது. இதன் மூலம், *Input/Output Operations Per Second (IOPS)* (செக்கனுக்கான உள்ளீடு/ வெளியீட்டு செயற்பாடு) ஆனது, செயல்திறன், நிலைப்புத்தன்மை, பதிலளிப்பு நேரம் ஆகியவற்றில் முக்கிய மேம்பாடுகள், செயற்பாட்டு அழுத்தங்களைக் குறைத்தல் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை கணிசமாக அதிகரித்தல் ஆகியவற்றுடன் அசாதாரணமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது.


இந்த கூட்டாண்மையானது, டிஜிட்டல் மாற்றத்திற்கான LB Finance இன் அசைக்க முடியாத உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். உயர்ந்த நிதிச் சேவைகளை வழங்குவதற்காக தனது தொழில்நுட்ப திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு நிறுவனம் உறுதி பூண்டுள்ளது.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# கல்முனையில் தரமிக்க பொருட்களை வழங்க உதயமாகும் ACA & Sons

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்



வெளிநாடுகளில் இருந்து மக்கள் பாவனைக்கு உதவும் பொருட்களை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்வதை நோக்காகக் கொண்டு கல்முனையில் *ACA & Sons* எனும் பெயரில் வர்த்தக நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி பல் பொருட்கள் காகிதாதிகள் வீட்டு பாவனைப் பொருட்கள் விளையாட்டுப் பொருட்கள் LED மின் குமிழ்கள் அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெறும் வாய்ப்பும் வாடிக்கையாளர்களுக்கு இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்களை கவரும் வகையில் பொருட்கள் அடுக்கப்பட்டு சிரமமின்றி பொருட்களை கொண்டு செல்லும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை மத்தியமுகாம் மண்டூர் பெரியநீலாவணை மருதமுனை நற்பிட்டிமுனை சாய்ந்தமருது நிந்தவூர் பாலமுனை அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று பொத்துவில் ஆகிய தூர பிரதேசங்களில் இருந்தும் இங்கு வாடிக்கையாளர்கள் வருகை தருகின்றனர்.

# மறக்க முடியாத தருணங்களை ஏற்படுத்திய Pegasus Reef



அண்மையில் இடம்பெற்ற Pegasus Reef அழகிய கடற்கரை நிகழ்வு உற்சாகம், போட்டி, சமையல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் மூலம் மகிழ்ச்சியை உயிர்ப்பித்தது.

உற்சாகமான விளையாட்டுப் போட்டிகளுடன் விழா தொடங்கியதோடு, பங்கேற்பாளர்கள் Tug ரக்பியில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். கடற்கரை கரப்பந்து விளையாட்டில் பங்கேற்பாளர்கள் ஈடுபட்டனர். அதிகமான பணப் பரிசுகளுடன், அணிகள் வெற்றிக்காக போட்டியிட்டதால் உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கியது.

விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து, கடற்கரையோரம் அமைக்கப்பட்ட பல வகையான உணவு விற்பனையகங்கள் கவனத்தை ஈர்த்தன. ஒவ்வொருவரின் நாவும் திருப்தி அடையும் வகையிலான, புதிய கடல் உணவுகள் முதல் சர்வதேச உணவு வகைகள் வரையிலான சமையல் தெரிவுகள் பங்கேற்பாளர்களுக்கு விருந்தளித்தன.

துள்ளல் இசையின் குதூகலம், பெகாசஸ் ரீஃப் கடற்கரையில் மறக்கமுடியாத தருணங்கள் நிறைந்த ஒரு சிறப்பான நாளினை வழங்கியது, நடனமாடி மகிழவும், அனுபவிக்கவும் பங்கேற்பாளர்களை தூண்டியது.

உற்சாகம், போட்டி மற்றும் சமையல் மகிழ்ச்சி ஆகியவற்றின் கலவையானது கலந்துகொண்ட அனைவருக்கும் ஒரு மறக்கமுடியாத அனுபவத்தை வழங்கியது, அதே நேரத்தில் பெகாசஸ் ரீஃபின் அழகிய கடற்கரைகள் உற்சாகம் மற்றும் அமைதியின் சிறப்பினை அள்ளி வழங்கின.

# SME விநியோகச் சங்கிலி நிதியுதவியை மேம்படுத்த ஒன்றிணைந்த SDB, Rabobank



புகழ்பெற்ற டச்சு நிதி நிறுவனமான Rabobank உடன், கூட்டுறவுத் துறை மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களை (SME) வலுவூட்டுவதன் மூலம் இலங்கையின் விவசாய வணிகத் துறையை மேம்படுத்துவதில் ஒரு மூலோபாய பங்காளித்துவத்தை SDB வங்கி ஏற்படுத்தியுள்ளதை அறிவிப்பதில் வங்கி பெருமிதம் கொள்கிறது. இந்த கூட்டாண்மையானது சமூக மற்றும் சூழல் நிலைபேறான தன்மை, டிஜிட்டல் தீர்வுகளை மேம்படுத்துதல், காலநிலைக்கு ஏற்ற புத்திசாலித்தனமான விவசாயம், விநியோகச் சங்கிலி மேம்பாடு சிறிய, நடுத்தர வணிகங்கள், விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துதல் அத்துடன் ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான கூட்டாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் திறனை மற்றும் உற்பத்தி நிதியளிப்புக்கான மாதிரி அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நெதர்லாந்தின் Utrecht நகரில் தலைமையகத்தைக் கொண்ட Rabobank ஆனது மொத்த சொத்துகளின் மதிப்பின் அடிப்படையில் நெதர்லாந்தின் இரண்டாவது பெரிய வங்கியாகும். உணவு மற்றும் விவசாய வணிகத்தில் சர்வதேச ரீதியான கவனத்தைக் கொண்டுள்ள Rabobank ஆனது விரிவான நிலைபேறான விவசாயத் துறையின் வளர்ச்சியை அடைய விவசாய சூழல் கட்டமைப்பில் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதில் சிறந்த நிபுணத்துவத்தை கொண்டுள்ளமைக்காக அது புகழ் பெற்று விளங்குகின்றது. தனது வலையமைப்புகள் மூலமாக புத்தாக்க கண்டுபிடிப்புகள் அறிவுப் பகிர்வு மூலம் செயற்பாட்டில் கூட்டாண்மையின் முக்கிய பங்கு வகிக்கின்ற நிதி உள்ளீர்ப்பு கிராமப்புற மேம்பாடு மற்றும் நிலைபேறான உணவுப் பாதுகாப்பு போன்ற முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்காக Rabobank ஆனது உணவுச் சூழல் தொகுதியில் உள்ள தரப்பினரை இணைக்கிறது.

# வாழைச்சேனையில் 50ஆவது கிளையை திறந்து வைத்த சியபத பினான்ஸ் பிஎல்சி



முன்னணி உள்நாட்டு நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி தனது 50ஆவது கிளையை வாழைச்சேனையில் அண்மையில் திறந்து வைத்தது. சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர், வாழைச்சேனை பிரதேச செயலாளர் திருமதி ரோஷினி விக்னேஸ்வரன், வாழைச்சேனை உதவி பொலிஸ் சுப்ரின்டென்ட் ஏ.எல்.எம். ஜமீல், வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எம்.ஆர். பண்டார, வாழைச்சேனை கிராம சேவகர் கே.சுபாஷ், வாழைச்சேனை சம்பத் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் ஏ.என்.டேவிட் நிதர்ஷன், அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் புதிய கிளையின் திறப்பு விழா இடம்பெற்றது.

மீன்பிடி, பெருந்தோட்டம் மற்றும் புடவைக்கைத்தொழில் முதல் சுற்றுலா, விருந்தோம்பல் வரை, வாழைச்சேனை இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் தொகை செறிவாக வாழும் நகரமாக, வணிக ரீதியில் வேகமாக முன்னேறியுள்ளது. இந்த பல்துறை வணிகத் தன்மையும், அப்பகுதியில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் வனப்பும், சியபதவை அதன் அதிகபட்ச திறனைக் கண்டறிய உள்ளூர் மக்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

'சியபத பினான்ஸ் பிஎல்சி, இன்று தேசத்தின் ஒவ்வொரு மூலையையும் அடைவதற்கான அதன் இலக்கில், குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. வாழைச்சேனையில் எமது 50ஆவது கிளை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், வளர்ந்து வரும் வர்த்தக சமூகத்திற்கு எமது முழுமையான நிதிச் சேவைகளை வழங்குவதற்கும், எமது நிறுவனத்தின் நோக்கத்தை மெய்ப்பிக்கும் வாய்ப்பையும் வழங்கியுள்ளது. புதிய சமூகங்களை தொடர்ந்து சென்றடைவது உண்மையிலேயே பலனளிக்கும் அனுபவமாகும், மேலும் இந்த விரிவாக்க முயற்சிகளை எதிர்காலத்திலும் தொடர நாங்கள் உறுதியாக உள்ளோம்' என சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன தெரிவித்தார்.

# ஹோகந்தரவில் மலிவு விலையில் ஆடம்பரத்தை வழங்கும் Groundworth



முன்னணி ரியல் எஸ்டேட் மற்றும் முதலீட்டு நிறுவனமான Groundworth Partners, ஹோகந்தரவில் தனது பெறுமதி வாய்ந்த ரியல் எஸ்டேட் திட்டமான Groundworth St. Katherine Gardens திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த பிரத்தியேக திட்டமானது, புகழ்பெற்ற St. Katherine சமூகத்தில் மலிவு விலையிலான காணியை சொந்தமாக்குவதற்கான, ஒப்பற்ற வாய்ப்பை வழங்குகிறது. தற்போது இதில் எஞ்சியுள்ள 18 காணிகளில் ஒரு பேர்ச் ஆனது, ரூ. 1.595 மில்லியனில் ஆரம்பமாகின்றது.

இது பற்றி Groundworth Partners நிறுவனத்தின் இணை நிறுவுனரும் அதன் நிர்வாகப் பணிப்பாளருமான சுகன் அந்த்ரஹென்னதித் தெரிவிக்கையில், "எமது குழுவானது, காணிகளுக்கு சிறந்த மேம்பாட்டை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், ரியல் எஸ்டேட் பிரிவில் அதற்கு நிகரற்ற பெறுமதியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. உங்கள் முதலீடு செழித்தோங்குவதை உறுதி செய்வதற்காக, உரிய செயன்முறைகளின் அடிப்படையில் நாம் காணிகளைத் தெரிவு செய்கிறோம். அமைவிடம் என்பது முக்கியமானது என்பதால், வலுவான வளர்ச்சியுடன் சாத்தியமான வகையில் நீங்கள் விரும்பக்கூடிய இடத்தில் உங்கள் அமைவிடத்தை அமைப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

இலகுவாக சென்றடைவது அத்தியாவசியமான ஒன்று என்பதால், அமைவிடமானது குறைந்தபட்சம் 20 அடி அகலமான வீதியோடு இணைந்திருப்பதற்கு நாம் முன்னுரிமை அளிக்கிறோம். அனைத்து விடயங்களுக்கும் வசதியான வாழ்க்கை மிக அத்தியாவசியமான ஒன்று என்பதால், அனைத்து விதமான வசதிகள் மற்றும் தேவைகளுக்கும் மிக அருகில் காணப்படும் காணியை நாம் தேடித் தெரிவு செய்கிறோம். தெளிவான காணி உறுதியானது, உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையுடன் இலகுவான முதலீட்டு செயற்பாடுகளுக்கு உத்தரவாதமளிக்கும்." என்றார்.

# இந்தியாவை வீழ்த்திய இலங்கை அணி ஒருநாள் தரவரிசையிலும் முன்னேற்றம்




இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 2–0 என கைப்பற்றிய இலங்கை அணி சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலில் தரவரிசையில் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக பெற்ற தொடர் வெற்றி 27 ஆண்டுகளின் பின்னர் அந்த அணிக்கு எதிராக பெறப்பட்ட முதல் இரு தரப்பு தொடர் வெற்றியாக இருந்தது. இதனையடுத்து ஐ.சி.சி. வெளியிட்டிருக்கும் புதிய ஒருநாள் தரவரிசை பட்டியலிலேயே இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

இதன்படி முன்னர் 7 ஆவது இடத்தில் இருந்த இலங்கை அணி இங்கிலாந்து அணியை பின்தள்ளில் ஒரு இடம் முன்னேற்றம் கண்டு 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எவ்வாறாயினும் தொடர் தோல்வியை சந்தித்தபோதும் இந்தியா அணி ஒருநாள் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறது.

இதனையடுத்து அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் காணப்படுகின்றன.

# பாடசாலை ரக்பி தொடருக்கு 'பிறிமா கொத்துமீ' ஆதரவு



இந்த ஆண்டு பாடசாலை ரக்பி தொடருக்கு துரித நூடுல்ஸ் வர்த்தக நாமமான, பிரபலமான பிறிமா கொத்துமீ உத்தியோகபூர்வ ஆதரவை வழங்கியுள்ளது.

கொழும்பு றோயல் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி, திரித்துவ கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி, இசிபதான கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றின் ரக்பி இரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், அதிகம் எதிர்பார்க்கப்படும் 2024 பாடசாலை ரக்பி தொடர் முழுவதும், விளையாட்டின் மீது தாம் கொண்டுள்ள ஆதரவை பிறிமா கொத்துமீ வெளிப்படுத்தவுள்ளது. இந்த அணிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், இலங்கை இளைஞர்கள் கொண்டுள்ள ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் பிறிமா கொத்துமீ தன்னை இணைத்துக் கொள்வதில் பெருமை கொள்வதாக குறிப்பிட்டுள்ளது.

பிறிமா கொத்துமீ உடன் இணைந்து இலங்கை பாடசாலை ரக்பிக்கு ஆதரவை வழங்குவதற்கு அது அழைப்பு விடுத்துள்ளது.

# அறுகம்பே அரை மரதன் போட்டி ஓகஸ்ட் 18இல்

**பாலமுனை விசேட நிருபர்**



அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 18ஆம் திகதி பொத்துவில் அறுகம்பேயில் நடைபெறவுள்ளது.

ஆறாவது முறையாக இடம்பெறும் இந்த மரதன் போட்டி சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் 200 உள்நாட்டு வீரர்கள் மற்றும் 50 வெளிநாட்டு வீரர்கள் என மொத்தம் 250 பேர் வரை கலந்துகொள்ளவுள்ளனர். போட்டிகள் 21.1 கிலோமீற்றர், 10 கிலோமீற்றர் மற்றும் 5 கிலோமீற்றர் என 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளன. 21.1 கிலோமீற்றர் பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டவர்களும், 10 கிலோமீற்றர் பிரிவில் முதியவர்களும், 5 கிலோமீற்றர் பிரிவில் 12–17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் பங்குபற்ற முடியும். இப்போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# சம்பியனானது அல் அறபா

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



நிந்தவூர் புளூ மௌண்டன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பி.எம்.–டி20 கிரிக்கெட் தொடரில் பாலமுனை அல்–அறபா விளையாட்டு கழகம் சம்பியனானது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் காடந்த ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டியில் நிந்தவூர் புளூ மௌண்டன் விளையாட்டு கழகத்தை 23 ஓட்டங்களால் அல்–அறபா அணி வீழ்த்தியது. இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக அல் – அறபா அணியின் றிபானும், தொடரின் சிறந்த வீரராக புளூ மௌண்டன் கழகத்தின் தலைவர் நஜாதும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அல் புர்கான் வித்தியாலயம் எறிபந்து போட்டியில் வெற்றி

**தம்புள்ள தினகரன் நிருபர்**



மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான எறிபந்துப் போட்டியில் கலேவெல கல்வி வலயத்தின் அல் புர்கான் மகா வித்தியாலயம் வெற்றியீட்டி தேசிய போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

மத்திய மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எறி பந்து போட்டி அண்மையில் கண்டி, குண்டசாலை, கென்கல்ல, தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் இடம் பெற்றது. இதில் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியிலேயே கலேவெல, அல் புர்கான் மகா வித்தியாலயம் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹசீனா நாடு திரும்ப திட்டம்



பங்களாதேஷின் புதிய இடைக்கால அரசு தேர்தல் ஒன்றை அறிவித்த பின் பதவி விலகிய பிரதமர் ஷெய்க் ஹசீனா நாடு திரும்புவார் என்ற அவரது மகன் தெரிவித்துள்ளார். எனினும் அவர் தேர்தலில் போட்டியிடுவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை அடுத்தே ஹசீனா பதவி விலகி அண்டை நாடான இந்தியாவில் தஞ்சமடைந்தார். நோபல் பரிசு பெற்ற முஹமது யூனுஸ் தலைமையில் பங்களாதேஷின் இடைக்கால அரசு ஒன்று கடந்த வியாழக்கிழமை அமைக்கப்பட்டது. அதன் கீழ் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இந்நிலையில் இந்திய ஊடகத்திற்கு பேசிய, அமெரிக்காவில் வசித்து வருபவரான ஹசீனாவின் மகன் சஜீத் வாசத், 'தற்போது அவர் (ஹசீனா) இந்தியாவில் இருக்கிறார். இடைக்கால அரசு தேர்தல் ஒன்றை நடத்த தீர்மானிக்கும் நேரத்தில் அவர் பங்களாதேஷ் திரும்புவார்' என்று குறிப்பிட்டார். எனினும் அவர் தேர்தலில் போட்டியிடுவது குறித்து குறிப்பிட்டு கூறாத வாசத், 'இந்தத் தவணையுடன் அவர் ஓய்வு பெறவே திட்டமிட்டிருந்தார்' என்றார். அமைக்கப்பட்டிருக்கும் இடைக்கால அரசில் ஹசீனாவில் அவாமி லீக் கட்சி இடம் பெறவில்லை.

தற்போது புது டெல்லியில் பாதுகாப்பான வீடு ஒன்றில் தங்கி இருக்கும் 76 வயதான ஹசீனா, பிரிட்டனில் தஞ்சம் கோர திட்டமிடுவதாக செய்தி வெளியானபோதும் அது தொடர்பில் கருத்துக் கூற பிரிட்டன் மறுத்துள்ளது.

# விண்வெளியில் சிக்கியவர்கள் பூமிக்கு திரும்புவதில் தாமதம்



விண்வெளியில் சிக்கி இருக்கும் இரு அமெரிக்க விண்வெளி வீரர்களும் 2025 ஆம் ஆண்டு வரை பூமிக்கு திரும்ப முடியமால் போகலாம் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா குறிப்பிட்டுள்ளது.

பேரி வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் இவ்வாண்டு ஜூன் 5ஆம் திகதி விண்வெளிக்குப் பயணத்தை மேற்கொண்ட நிலையில், அவர்கள் சென்ற விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் தொடர்ந்து தங்கி உள்ளனர்.

அவர்கள் எட்டு நாட்கள் மாத்திரமே விண்வெளியில் தங்கி இருக்க திட்டமிட்ட நிலையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக விண்வெளியில் சிக்கியுள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் பூமிக்கு திரும்புவதற்கான இரண்டு தேர்வுகள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக நாசா தெரிவித்துள்ளது.

இதில் முதல் தேர்வு அவர்கள் அங்கு சென்ற ஸ்டார்லைனர் விண்கலத்திலேயே திரும்ப வேண்டும் என்றபோதும் அதற்கு அந்த விண்கலம் திருத்தப்பட வேண்டி உள்ளது.

மற்றது எதிர்வரும் செப்டெம்பரில் செல்லவுள்ள ஸ்பேஸ் எக்ஸ் திட்டத்தில் நான்கு விண்வெளி வீரர்களில் இருவரை நீக்கி விட்டு செல்வதாகும். இதன்மூலம் இந்த விண்கலம் எதிர்வரும் பெப்ரவரியில் பூமிக்கு திரும்பும்போது வில்மோர் மற்றும் சுனிதாவால் அதில் இணைய முடியுமாக இருக்கும்.

# சிந்தி சிறுமியை மீட்க கோரி சிக்காகோவில் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் காணாமல் போயுள்ள சிந்தி சமூகத்தைச் சேர்ந்த சிறுமி பிரியா குமாரியை பாதுகாப்பாக மீட்டுத் தருமாறு கோரி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரிலுள்ள பாகிஸ்தானின் கொன்சியூலர் அலுவலகத்திற்கு முன்பாக நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை சிந்தி மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், சிறுமியை பாதுகாப்பாக மீட்டுக் கொள்வதையும் சிந்தி சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்று கொள்வதையும் நோக்காகக் கொண்டு இங்கு ஆர்ப்பாட்டம் நடத்துவதாக குறிப்பிட்டுள்ளனர்.

பிரதேசத்திலுள்ள நிலபிரபுத்துவ தரப்பை சேர்ந்த ஒருசிலரே இச்சிறுமி காணாமல் போயுள்ளமைக்கு காரணமென மன்றத்தின் பணிப்பாளர் முனவர் சூபி லகாரி அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

## சர்வதேச செய்திகள்

### தொடரும் தாக்குதல்கள், உயிரிழப்புகளுக்கு இடையே

# காசா போர் நிறுத்த பேச்சை அடுத்த வாரம் ஆரம்பிக்க இஸ்ரேல் இணக்கம்



காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் விடுத்த கோரிக்கைக்கு இஸ்ரேல் இணங்கியுள்ளது. எனினும் ஹமாஸ் தரப்பில் இருந்து இது தொடர்பில் உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

காசாவில் ஓர் ஆண்டை தொடும் போர் பிராந்தியத்திலும் போர் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே டெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேல் மீது பதிலடி கொடுக்க ஈரான் உறுதிபூண்டிருப்பதோடு, இஸ்ரேலின் வடக்கு எல்லையில் லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகளுடன் தினசரி மோதல் இடம்பெற்று வருகிறது. மறுபுறம் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் நேற்றும் வர்த்தகக் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றுக்காக பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி டொஹா அல்லது கெய்ரோவில் நடத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைக்கு தமது பிரதிநிதிகளை அனுப்புவதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

'எஞ்சியுள்ள பிளவுகளை சரி செய்து தாமதம் இன்றி உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கே' இந்த மூன்று நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன. 'மத்தியஸ்தர்கள் என்ற வகையில், தேவைப்பட்டால், அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில், எஞ்சியுள்ள நடைமுறை சிக்கல்களைத் தீர்க்கும் இறுதித் திட்டத்தை முன்வைக்க நாங்கள் தயாராக உள்ளோம்' என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கூட்டு அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி மற்றும் கட்டார் எமீர் ஷெய்க் தமீம் பின் ஹமத் அல்தானி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மே 31 ஆம் திகதி முன்வைத்து, ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் உறுதி செய்யப்பட்ட திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் முழு அளவிலான போர் நிறுத்தம் மற்றும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் கணிசமான பணயக்கைதிகளை விடுவிப்பது குறித்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் அவை அனைத்தும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் ஸ்தம்பித்துள்ளன. ஹமாஸ் முழு அளவிலான போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்துகின்றபோதும் ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டாலேயே போர் முடிவுக்கு வரும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறி வருகிறார்.

ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்ட நிலையில் அதன் புதிய தலைவராக யெஹ்யா சின்வார் நியமிக்கப்பட்டுள்ளார். அது புதிய சுற்று போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை மேலும் இறுக்கமாக்கும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் காசாலில் இஸ்ரேலின் தாக்குதல்கள் மற்றும் பலஸ்தீன போராளிகளுடனான மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. கடந்த வியாழக்கிழமை மாலை காசா நகரில் இரு பாடசாலைகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 18க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் மேலும் 60க்கும் அதிகமானோர் காயமடைந்து 40க்கும் அதிகமானோர் காணாமல்போயிருப்பதாக அந்த நிறுவனத்தின் மூத்த அதிகாரியான முஹமது அல் முகையிர் குறிப்பிட்டுள்ளார். 'காசாவில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொதுமக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இடங்கள் இலக்கு வைக்கப்படுவது தெளிவாகத் தெரிகிறது' என்றும் அவர் கூறினார்.

காசா நகரில் கடந்த எட்டு நாட்களில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ஒன்பது பாடசாலைகள் மீது இஸ்ரேல் குண்டு வீசி இருப்பதாக மனித உரிமைக் குழு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய காசாவின் நுஜைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதாக சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர்கள் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தெற்கு நகரான கான் யூனிஸில் புதிய படை நடவடிக்கை ஒன்றை அறிவித்திருக்கும் இஸ்ரேலியப் படை அங்குள்ள பொதுமக்களை வெளியேற உத்தரவிட்டுள்ளது. அங்கு பலஸ்தீன போராளிகளுடன் தரை மற்றும் தரைக்குக் கீழ் மோதல் இடம் பெற்று வருவதாகவும் இஸ்ரேல் இராணுவ கூறியது. கான் யூனிஸில் கடந்த 24 மணி நேரத்தில் 30 வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அது நேற்று கூறியது.

காசாவில் 11 மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,000 ஐ நெருங்கியுள்ளது.

பிராந்தியத்தில் அதிகரித்திருக்கும் போர் பதற்றத்தை தணிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றபோதும் தெற்கு லெபனானின் நகூரா நகரில் இஸ்ரேல் நேற்று நடத்திய ஆளில்ல விமானத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக லெபனான் பொது சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே ஹிஸ்புல்லாவின் முன்னணி இராணுவத் தளபதி ஒருவர் பெய்ரூட்டில் கடந்த வாரம் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுப்பதாக ஹிஸ்புல்லா சூளுரைத்து வரும் நிலையில் இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே முழு அளவில் போர் வெடிக்கு அச்சுறுத்தல் உள்ளது.

இதேவேளை, ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள யெமன் கடற்கரைக்கு அப்பால் வர்த்தகக் கப்பல் ஒன்றை இலக்கு வைத்து ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்த முயற்சி இடம்பெற்றிருப்பதாக பிரிட்டன் கடல் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று தெரவித்துள்ளது. இதன்போது ரொக்கெட் குண்டுகள் கப்பலுக்கு அருகில் விழுந்து வெடித்ததாக அது கூறியது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஹூத்திக்கள் கடந்த நவம்பர் தொடக்கம் செங்கடல் மற்றும் அதென் வளைகுடாவில் செல்லும் கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.